விலை 20/=
ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 | சித்திரை 2018 | களரி: 04



வறட்சியில் நெடுந்தீவு



கிழக்கு அரியாலை வளம் பெறுமா?



## ஐ.நா வாக்குறுதிகள் நிறைவேறுமா?

## மதமுறுகல் நிலை நீறு பூத்த நெருப்பாகிவிட்டதா?

பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்போமா?



## வட்டுவாகல் பாலத்தின் நிலை

## சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

யாழ் முதல்வர் யாழ் களரியுடன்

**நீ உருவாகி பிறரை உருவாக்கு**

# பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க முன் வாருங்கள்

சென்சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக்கூட்டம் அதிபர் தலைமையில் நடைபெற்றபோது சிறப்புரை ஆற்றிய பல மொழி அறிவுடன் பல தேசங்களிலும் தமிழ் மக்களின் உரிமைக்காக உயர்வுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து இன்று யாழ் மண்ணில் நட்புடன் பழகும் பெருமை பாராட்டாத சிறந்த குரு.எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரின் உரையிலிருந்து........................


எஸ். ஜே. இம்மானுவேல்

சமூக முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட முன் வருவோர் அரிதாகி வரும் காலத்தில் பாடசாலை அபிவிருத்தியில் அக்கறைபடும் குழுவினரை பாராட்டுகிறேன்.

கல்வியில் அடைவுடன் மட்டுமல்ல பண்பாட்டு விழுமியங்களிலும் மாணவர்களை தயார்படுத்த வேண்டியது பாடசாலை சமூகமாக மாறவேண்டும். இங்கு மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பல அமைப்புக்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் இயங்குகின்றன. அவர்கள் உதவும் மனப்பான்மையுடன் சேகரிக்கும் பணங்கள் மாணவர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் கல்வி மேம்பாட்டையும் முன்னெடுப்பதற்கு உதவவேண்டும். கட்டிடங்களும் கலை நிகழ்ச்சிகளுடன் மட்டும் மட்டுப்படுத்தாது. நல்லதோர் சமூகம் மலர உதவிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

பல கூட்டங்களுக்கு வெளி நாடுகளிலும் இங்கும் பங்கு பற்றி வருகிறேன். பேச்சுக்கள் அதிகமாகவும் செயல்கள் அதிகமாகவும் இருப்பதற்கு காரணம் பெறுப்பேற்கும் மனப்பக்குவம் வளரவேண்டும். பிறர் மீது குறை காண்பதில் தான் நேரம் கரைகிறது. தன் பணிகள் பங்கேற்புகள் பற்றியும பிறரின் நல்ல பண்புகள் பற்றியும் உரைப்பதோடு சமய விழுமியங்கள் கூறும் மன்னிப்புடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வளர்வதே சிறந்தது.

நான் வீதி வழி செல்லும் போது எல்லோரும் மன இறுக்கத்துடன் புன்னகையை தொலைத்தவர்களாகவே காணப்படுகிறார்கள் இதில் வயது வேறுபாடுகளோ பதவி பட்டங்களில் இருப்பவர்களே மனச்சுமையால் பிறர்மீது அக்கறையின்றி செல்வது கவலை அளிக்கிறது.

பாதை வழி செல்வோர் ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்க தெரியாதவர்களாக நடையிலும் வாகனங்களிலும் செல்வதை காணமுடிகிறது. இதுவே பல விபத்துக்களுக்கும் காரணமாகிறது.

முதலில் பாடசாலை மட்டத்திலும், பொது அமைப்புக்கள் போக்குவரத்து பிரிவினர்கள் சட்டம் ஒழுங்கை வழிகாட்டுவோர் பாதை ஒழுங்கு பற்றிய வழிகாட்டல் வழிமுறைகளை கற்றுக்கொடுக்க முயலவேண்டும்.

கல்வி என்பது புள்ளிகளோடு மட்டுப்படுத்தாது கண்ணியமுள்ளவர்களை உருவாக்கும் முயற்சிக்கு முன்னுரிமை அளிப்பதே சீரான மகிழ்வான சமூகம் மலர உதவும்.

இதனை முன்னெடுப்பதில் முன்வருவோராக முயல்வோரே சிறந்த சமூகஆர்வலர்களாவர் இப்பாடசாலையில் நானும் கல்வி கற்றேன் என்று பெருமையுடன் சொல்வதில் மகிழ்வடைகிறேன் என்றார்.

# பலமிழக்கும் வட்டுவாகல் பாலம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற "வட்டு வாகல் பாலம்" அதன் நிலை நாளுக்குள் மோசமடைந்து வருகின்றது. வெளிப்பார்வைக்கு காபற்போட்டு காணப்படுகிறது. இருந்த போதும் உடைந்து விழும் நிலையில் உள்பக்கக் கம்பிகள் உக்கியும் ஒரு பகுதி கீழே விழுந்தும் காணப்படுகின்றது. பாலத்தின் இரு மருங்கிலும் உள்ள அணைக்கட்டுக்களும் வெடிப்புக்கள் ஏற்பட்டு ஆபத்து நிறைந்த நிலையில் காணப்படுகின்றது. இப்போது வறட்சிக்காலம் இங்கே மீன்கள் மற்றும் கடல் உயிரினங்கள் பலவும் இறந்து துர்நாற்றம் வீசுவது ஒரு புறம் இதனை கருத்தில் கொண்டு சிலர் ரயர்போட்டு இறந்த உயிரினங்களை எரியூட்டப்பட்டுள்ளதும் காணமுடிகின்றது.

பாடசாலை மாணவர்கள் பயன்படுத்திய



தளபாடங்கள் கடந்த காலத்தின் கதைகளை மௌனமாக எடுத்துரைக்கின்றது. மேற்படி பிரதேசத்தில் சிறுவர், சிறுமிகள் சுகாதாரப்பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். போசாக்குக் குறைபாடுகளும் காணப்படுகின்றது. சிறுவர்களுக்கான ஆரோக்கிய உணவு திட்டங்கள் ஆளுமை விருத்திப் பயிற்சிகள் என்பன தேவையான தாகும். இவர்களுக்கு உதவவேண்டும் என்று ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்தபோதும் பாலத்தைப் பார்த்தால் தெரிகிறது. உள் கட்டுமானங்கள் எவ்வாறு மெழுகிப் பூசப்பட்டுள்ளது என்று மேற்படி பாலத்தில் அண்மையில் சிவப்புக் கொடி பறக்கவிடப்பட்டு வட்டுவாகல் பாலத்தின் அவலத்தை வெளிப்படுத்தப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ் களரி – ஒளிப்படக் குழுவினர் முல்லைத்தீவின்



சென்றபோது சில காட்சிகள் பதிவாகியுள்ளது. இது தவிரவும் தங்கம் தேடுவதற்க்கு முயற்சிக்கின்றனர். விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாகக் கூறி மனிதக் கொலை ஆதாரங்களை அழித்து வருகின்றனர்.

பொலிசார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் புதையல் தேடும் நோக்கில் சில இடங்கள்அண்மையில் தோண்டப்பட்டது. இருந்தும் எதுவும் இதுவரை சிக்கவில்லை. அதோடு காட்டுமரங்கள் விறகுக்காக கொடுக்கப்பட்டுள்ளதும் அவதானிக்க முடிகின்றது. இங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்குத் எந்தத் தீர்வும் கொடுப்பதற்கு யாருமில்லை ஆனால் உள்ள வளங்களை சுரண்டுவதற்கான வாயிலாக இருக்கிறதா வட்டுவாகல் என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# மத முறுகல் நிலை
## நீறு பூத்த நெருப்பாகிவிட்டதா?

காலம் கடந்து ஞானம் பிறக்கிறதால் ஏற்படும் நிலையில் தமிழர் முஸ்லிம் உறவுகள் பலமில்லாத நிலைக்கு அரசியல் மதத்தலைமைகளின் அக்கறை இன்மை, அலட்சியம், அரசியல் இலாபம், மதவெறி போன்ற மனப்பாங்கின் வெளிப்பாடுகளே நீறுபூத்த நெருப்பாக இன்றும் கொதிநிலையில் காணப்படுகிறது.

இவற்றுக்கான நிரந்தரத் தீர்வு எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. எரியும் பிரச்சனைகளின் வெளிப்பாடுகளில் சூத்திரதாரிகள் எவரும் தண்டனை பெறமாட்டார்கள் என்ற நம்பிக்கை மனப்பாங்கு வளர அரசியல்வாதிகளின் பக்க பலமும், மூடிமறைக்கும் விசாரணைப் பொறிமுறைகளும் காவலாளிகளே வேலிகளைப் பிடிங்கி எறியும் போக்குகள் கள்வர் கையில் கைக்குண்டுகளும், கைத்துப்பாக்கிசரமும் தினம் தினம் அரங்கேறும் தீர்ப்புக்களும் கொலைக்கலாசாரம் கண்டும் கணாத புலன் விசாரணைகளும், ஆணைக்குழுக்களின் அதிகரிப்பும் விசாரணைகளின் அதிகரிப்பும் அதிகரிக்கிறதே தவிர எவரும் சட்டத்தில் சிக்கி வெளிப்படுத்தியிருக்க முடியாத நிலையில் தொடரும் தொல்லைகள்யாவும் நமக்கல்ல என்று ஒதுங்கும் மத அரசியல் பொது அமைப்புக்களின் பொழுது போக்கு கோசங்களும் விடைகாண முடியாத ஏக்கத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தி வருகிறது. இதுவே இன்றைய யதார்த்தம் ஆகும். சர்வ மத தலைமைக் குழுக்கள் பல புற்றீசலாக சகல மட்டத்திலும் நிறுவப்பட்டு முளைத்து முரண்பட்ட கருத்துக்களை அறிக்கையாக விடுவதுடன் தம் கடமை முடிந்து என தமக்குள்ளே ஏற்படும் மோதல்களைக் கூட தீர்க்க முடியாது திணறுவதைக் காண்கிறோம். இதனால் இனமுரண்பாடு ஒரு புறம், மதமுரண்பாடுகள் தீவிரம் அடைந்து வர எரிப்பதை எரியாது தடுக்க முடியாத பாதுகாப்பு இல்லா நிலையில் மத அமைப்புகள் சாத்தான் வேதம் ஓதுவதுபோலவே எரிவதைப் பார்த்து இருந்து எரிந்தபின் சிரமதானம் நிவாரணம், சமபந்தி, சமாதானம் பேசி வருவதில் புகை படத்திற்கு முகம் கொடுக்க முண்டி அடிப்போராகி விட்டனர் சர்வமதவாதிகள் தெற்கே நடந்தேறியவை வடக்குக்கிழக்கில் தீமூட்டிவிட முன்னையகால "கிறிஸ்பூதம்" பூச்சாண்டிபோல் பரவலாக வடக்குக் கிழக்கில் சிலை உடைப்புக்கள், உண்டியல் உடைப்புக்கள், மதத்தலங்கள் சேதப்படுத்தல் அரசியல் மதங்களிடையே முரண்பாடுகளைத் தூண்ட முற்படும் சிறு சிறு சம்பவங்கள் பரவலாக பெருகிவர மத முரண்பாட்டை தூண்டும் குழு ஒரு சில ஊடகங்கள் கொள்ளி கொடுத்து எரிய தூண்டுவதும் கவலை அளிக்கிறது. உண்மையான மதப்பற்றுள்ளவன் மனிதநேயத்துடன் பிறர் மனதை புண்படுத்தமாட்டான், மதவெறிபிடித்தோரே பிற மதங்களை மதிக்கும் பண்பில்லாதவனாக மாறுகிறான். இன்று நடைபெறும் சம்பவங்கள் மனம் கொண்டமதம் மதம் கொண்டால் மனித மகத்துவத்தை இழந்துவிட்டது. மனம்கொண்ட மதத்தை வழிபட முன்னுரிமை பின்னுரிமை என்ற பேதம் எதற்கு உண்மையான ஆன்மீகம் உறவை பலமாக்க வல்லது. மதவிழுமியங்களை மதிக்காத மதவெறியாளரை உருவாக்க ஊக்கப்படுத்த தம் அரசியலை துரும்பாக பயன்படுத்தும் வக்கிரப்போக்கு உடையோரால் பாமர மக்கள் மதவெறிக்கு அடிமையானதை உள்ளூராட்சித் தேர்தல்கள் வெளிப்படுத்தின. இவர்களை இனம் கண்டு ஒதுக்குவதும் அதற்கு துணைபோவோரை உணரவைக்க ஆவன செய்ய வேண்டும் இவை பல காலமாக காயப்பட்ட உள்ளங்களின் மனதில் மீண்டும் குரோத எண்ணங்களை விதைத்து விட்டது நல்லாட்சி நம்பிக்கை வாழ்வை சிதைத்து வருகிறது. அம்பாறை, கண்டி, நுகுனா எனதொடரும் தீச்சுவாலைகள் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. மதம்பார்த்து இனம்பார்த்து திட்டமிடும் செயல்களில் ஈடுபடும் அரசியல் மதத்தலைமைகளின் வார்த்தைகளும் வழிகாட்டல்களும் அரசியல் இலாபமாக இருக்கலாம். மக்களின்மனங்களில் நல்லாட்சிக்கான நம்பிக்கையீனங்களும் தோல்விகளுமே தொடர் செயல்களால் அரங்கேறுகிறது. பகையைத்தூண்டும் மனத்துடன் வழிபடசெல்லாதீர்கள் துட்டரைகண்டால் தூரவிலகும் பக்குவத்துடன் முன்மாதிரியான ஆன்மீக பண்புகளை தூண்டி துலங்கவைக்கும் பிறமத நல்லுறவில் இறை உறவை பலமாக்கி சித்திரை புத்தாண்டில் சிறந்த சிந்தனையோடு நட்புறவை பலமாக்குங்கள்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்: வேதநாயகம் சஞ்சீவதனுசன் |
வடிவமைப்பு: மு.சதீஸ்குமார் | ஜோய் கிசோன்
ஓவியம் டொமினிக் ஜீவா
ஆலோசகர் குழு
செ.யோசப்பாலா, எஸ் பெருமாள், எஸ்.யேசுதாஸ், எம்.எல்.லாபிர்
பதிப்பு: யாழ்களரி வெளியீட்டகம், முத்து பிறின்டேர்ஸ்
muthuprint@gmail.com
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை
jaffnarakaswaram@gmail.com


## யாழ்களரி வாசகர்கள், அன்பு உறவுகள் யாவருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

*இனமத முறுகல் நிலைக்கு மக்களின் நல்லிணக்கத்தைக் குழப்பும் சக்திகள் குறியாயிருக்கின்றனர். நான்கு மதங்கள் உள்ள எமது நாட்டில் மூன்று இனங்கள் வாழ்கின்றார்கள். அதில் இரு மொழி பேசுபவர்களாக இருக்கின்றபோதிலும் யாவரும் ஒரே "மனிதர்கள்" என்பதை உணர்கின்றார்களில்லை.*

*ஆளுக்காள் பிரிவுகள், பிழவுகள், குரோதங்கள், இன,மத,சாதி கட்சி பேதங்கள் முரண்பாட்டுடன் வாழ்க்கை நகர்கின்றது. ஒற்றுமையோடு இருத்தல் என்பது எட்டாக் கனியாகவே காணப்படுகிறது. இந்நிலை மாறி பரஸ்பரம் புரிந்துணர்வை கட்டியெழுப்ப வேண்டிய உபாயங்களைக் கண்டறிய வேண்டும். நான்கு மதத் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் செயற்றிட்டங்களில் கூட பிரிவினைகள் காணப்படுகின்றது. மூவினத்திற்கும் உள்ள சமூகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் பாலமாக இருக்க வேண்டிய பல்சமயத் தலைவர்கள் சிலர் அரசியல்வாதிகளின் பிடிக்குள் இருப்பதால் இனக்கலவரங்கள், முரண்பாடுகள் ஏற்படும்பொழுது தடுத்து நிறுத்த வேண்டிய தர்மவான்கள் மௌனமாகின்றனர்.*

*தமிழ், சிங்கள புத்தாண்டில் உறுதியெடுத்துக் கொள்வோம். தமிழர்களின் தீர்க்க முடியாத பிரச்சனைகளாகக் கருதப்படுபவை ஊடகங்கள் மூலம் பெரும்பான்மை உறவுகளுக்குத் தெரியப்படுத்தும் பொறிமுறை எங்களிடம் உண்டா? தமிழ்தரப்பின் நியாயப்பாடுகளை சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கும் ஊடகம் அமைக்கப்பட வேண்டும். அதே போல சிங்கள மக்களின் கருத்து இது தான் என்பதை அரசியல் கலப்பற்று தமிழர்களிடம் கொண்டு சேர்க்கம் உபாயங்களும் ஆரோக்கியமானவை. சர்வ மதங்களுக்கிடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்ப பல்சமயக் கருத்தாடல் அவசியமாகும். அதே போல மூவினங்களுக்கும் அவரவர் தனித்துவங்களைப் பேணும் வகையில் கலைப் பாலங்கள், உறவுப்பயணங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சிங்களப் பாடப் புத்தகங்களில் தமிழும், தமிழ்ப்பாடப்புத்தகத்தில் சிங்களமும் கற்பிக்கப்படுவது சொல்லில் தான் இருக்கின்றதைக் காண்கின்றோம். இவையாவும் செயலுருவாக்கம் பெறும்போது தான் தமிழ், சிங்கள புத்தாண்டு அர்த்தமுள்ளதாகும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் தமிழர் வாழ்ந்த நிலங்களை விடுவிக்காமல் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதை நல்லாட்சி அரசாங்கம் உணர்ந்து கொண்டு விரைந்து செயற்பட வேண்டும்.*

# நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் உதவிகள் செய்ய வேண்டும்

## முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்


வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் நீண்டகால விளைவாக மிகவும் கூடுதலாக பாதிக்கப்பட்டது முல்லைத்தீவு மாவட்டமாகும்!

கடந்த 24.03.2018 சனிக்கிழமை காந்தன் புலம்பெயர் இளையோர்களால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 100 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கௌரவ வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்! அவர் மேலும் தெரிவிக்கையில் துயர் துடைக்கும் பயணத்தில் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் தனவந்தர்களும் பல வெளிநாட்டு அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் லண்டன் மாநகரில் தலைமையாகக் கொண்ட காந்தன் புலம்பெயர் இளையோர்கள் அமைப்பு பலவிதமான உதவிகள் செய்து வருகின்றது பாராட்டுக்குரியது. 2016ஆம் ஆண்டு காந்தன் புலம்பெயர் இளையோர் அமைப்பு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. 2018இல் காந்தன் உதவும் கரங்கள் என்ற பெயரில் முல்லைத்தீவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் இணைப்பாளராக திருமதி காயத்திரிதேவி அவர்கள் செயல்படுகின்றார். வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் பனியிலும் குளிரிலும் தமதுடல்களை வருத்தி பொருட் தேடலை மேற்கொள்கின்ற போது அதில் ஒரு பகுதியை எமது மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உதவி செய்வது அவர்களின் பெரும்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. காந்தன் புலம்பெயர் இளையோர் அமைப்பு தனது சேவைகளை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் முன்னெடுத்து வருவது சிறப்பம்சமாகும். வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்ளுக்கான உதவிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கான உதவிகள், கிராமப்புறப் பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள், மாணவர்களுக்கான இலவசக் கல்வி நிலையங்கள், வயோதிபர்களுக்கான உதவிகள் என்று பல்வேறுபட்ட உதவிகள் செய்து வருவதைக் காண்கின்றேன். மேலும் கைவேலி கணேச வித்தியாலய வகுப்பறைக் கொட்டகை அமைத்தல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுவாசிகளான வேடுவ மக்கள் வாழும் பிரதேசத்தில் கல்வியறிவை மேம்படுத்த கற்றல் கூடத்தினையும்நிரந்தர ஆசிரியரையும் வழங்கியுள்ளது இவ்வாறான உதவிகள் காலத்தால் போற்றத்தக்க உதவிகளாகும். உங்கள் சேவைக்கு என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே குடும்பங்கள் திரும்பத்திரும்ப உதவிகள் பெற்று வருவதாக கூறப்படுகிறது. இன்னொருவருக்கு கிடைக்கும் உதவிகளை தட்டிப்பறிப்பது கொள்ளையடித்தலுக்குச் சமனானது. பிரதேச செயலகங்கள், கிராம சேவகர்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். உதவி பெறாத வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர் நிலைபற்றி எடுத்துக்கூற வேண்டும்.

வாழ்வாதார உதவிகள் சுழல் நிதி முறை மூலம் வழங்கப்படுவது சிறப்பாகும். அதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு உதவமுடியும் எம் மக்களுக்கான தேவைகள் பெரிது கிடைக்கும் உதவிகள் ஆனைக்கு சோழப்பொரி நிலைமையே வடமாகாண சபையினருக்கும் கூடுதலான நிதி வாழ்வாதாரத்திற்கே செலவிடப்படுகின்றன. சாப்பிட மீன் தருவது ஒருவகை மீன் வலை கொடுப்பது திரும்பவும் மீன் பிடிக்க முடியும். இதுபோலவே நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் உதவிகள் செய்ய வேண்டும். துவிச்சக்கர வண்டி வருமானத்தை ஈட்டும் உதவிச் சாதனமாக மாணவர்கள் பாவிக்கப்படல் வேண்டும் என்றார்.

- முல்லைத்தீவிலிருந்து தர்னிஸ்கவின் -

# ஐ.நா வாக்குறுதிகள் நிறைவேறுமா



நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற இன்றைய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமென்று தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. இராணுவம் கைப்பற்றியிருந்த பொது மக்களின் குறிப்பிட்ட சில நிலப்பகுதிகளிலிருந்து இராணுவம் விலகி வேறு இடங்களுக்குச் சென்றுள்ளது. சில நிலப் பகுதிகளில் மக்கள் மீள்குடியமரவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவை கூட அரச நலன் சார்ந்தே நிகழ்ந்துள்ளன. முக்கியமாக போராட்ட முடிவில் இராணுவத்திடம் சரணடைந்த, கையளிக்கபட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நிகழ்ந்ததென்ற உறவுக ளின் போராட்டங்களும் ஒரு வருடத்தைக் கடந்தும் அரசு பாராமுகமாகவே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை என்ற பதில்கள் அரசிடமிருந்து கூறப்படுகின்றன. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஆணைக்குழு பல நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஆணைக்குழு போரின் பின்னரான நிலையில் வலிந்து காணாலமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதியை மழுப்பும் ஒரு செயலாகவே பார்க்கப் படுகின்றது.

இதற்கிடையில் நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மூலம் ஆளும் அரசு ஆட்டம் கண்டுள்ள நிலையில் ஊழல் மோசடிகள் மீதான விசாரணை நடவடிக்கைகள். புதிய அரசியல் திருத்தச் செயற்பாடுகள் எல்லாம் கிடப்பில் போடப் பட்டுள்ளன. ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இரண்டு வருடங்கள் கடந்தும் மூன்றாவது வருடத்திலும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் முடுக்கிவிடப் படா நிலையிலே இருக்கின்றன. ஐ.நாவின் இரண்டாவது கால அவகாசமும் நிறைவுறும் நிலையிலே. நாட்டில் இனமோதல்கள், வன்செயல்கள், அழிவுகள் , ஊரடங்கு, அவசர காலநிலைப் பிரகடனப் படுத்தப்பட்டு தற்போது அமைதி நிலையேற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரச்சினைகள் இவற்றினாலே நாட்டிலே அரசியல் ஸ்திரமற்ற நிலைகளே தோன்றியுள்ளன. இனமோதல்கள், அழிவுகளின் பின்னணியிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னணியிலும் ஐ.நாவின் அங்கத்துவம் வகிக்கும் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளில் அழுத்தங்கள், ஆதரவுகள் இருக்கின்றன என்பதனை அரசியல் ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றார்கள். எனவே ஐ.நா முன்னெடுக்கும் நடவடிக்கை பெயரளவிலேயே உள்ளனவேயன்றி, அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ, தலையீடு செய்திடவோ முனைந்திடாத கண்துடைப்பாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றார்கள். போர் இடம் பெறாமல் இருக்கலாமே தவிர புரையோடிய புண்ணாகவே தமிழ் மக்களின் பிரச்சனைகள் இருந்து கொண்டிருக்கின்றது. மொத்தத்தில் வெளிநாடுகள் எல்லோருமே தத்தமக்காகவே வாக்குறுதிகளையும் தலையீடுகளையும் செய்கின்றார்கள் என்பது தெரிந்தும் நாம் எதுவும் செய்ய முடியாதவர்களாகவே இருக்கின்றோம்.

ஆக இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் தமிழ் பேசும் கட்சிகள், மக்களாகிய எமக்கிடையே கொள்கைப் பிரிவினைகள் மத்தியிலும் வலுவான ஒற்றுமை நிலை காணப்பட்டாலே, வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுக்கம் ஐ.நாவுக்கும் நாம் அளுத்தம் கொடுக்கலாம். எமக்கிடையே உள்ள சுயலாபப் பிரிவினைகளால் பாதிக்கப்படப்போவது எமது மொழியும், மண்ணும், எமது மக்களுமே என்பதை வெள்ளம் வந்தபின் அணை கட்ட வெளிக்கிடுவதால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. மக்கள் விழித்துக் கொண்டார்கள். தலைவர்கள் சரியான வழிகாட்டலை மக்களுக்கு வழங்க வேண்டும். இல்லையேல் மக்கள் தமக்கான தலைவர்களைத் தெரிந்து கொள்வார்கள் என்பதை வாக்காளராக நிரூபிப்பார்கள். தேல்தல் களம் பதில் சொல்லும்.

- அவதானி -

# அறிவியல்

வளர்ந்து வரும் மனித சமுதாயம் கிளர்ந்தெழும் கதிர்களைப்போல் மென்மேலும் பெருமை பெற்று ஏறு போல் வீறுநடை போடும் இவ்வேளையிலே விண்ணை இடிக்கும் தலை இமயத்தையும் தலை குனிய வைத்து விடுகிறது அறிவியல்.

நாம் கணக்கிடமுடியாத பல்லாயிரம் ஆண்டுகளாக நமது பூமி யாருமற்ற, யாதுமேயற்ற, பயனற்ற நீர்ப்பரப்பாக இருந்தது. மணல் திடல்கள் நிறைந்த இந்தப் பயனற்ற நிலத்தில் விடப்புட்ட ஆதிமனிதன் காட்டிலும், மேட்டிலும் அலைந்தான். கல்லிலும் முள்ளிலும் சிந்தித்துத் திரிந்தான். இடிக்குப் பயந்து ஒளிக்கு ஒழித்து அவன் பயந்த வாழ்வு நடத்தினான். சீறிவரும் மிருகங்களின் சீற்றக்குரலிலும் செத்துச் செத்து வாழ்ந்தான். இருக்கும் இடமோ நிரந்தர மற்றது. செய்யும் தொழிலோ நிலையற்ற தொழில். இந்த இழிநிலையில் காட்டுமிராண்டியாக ஆறறிவு படைத்த இரண்டு கால் மிருகமாக வாழ்ந்தானே மனிதன் அவனை இந்நிலைக்கு இழுத்து வந்தது அறிவியல்.

பயனற்ற பூமியிலே சஞ்சரித்த ஆதிமனிதன் பறவைகளின் இனிய நாதங்களைக் கேட்டான். மிருகங் களின் உறுமல்களைக் கேட்டான். உண்ண உணவின்றி அலைந்து இலைகளையும் பழங்களையும் உண்ட மனிதன் புரிந்த முதல் படைப்பு கற்களை உரசியதால் உண்டான தீப்பொறி. மிருகங்களை தீயில் பொசுக்கி சமைத்து உண்டான். வயிறு நிறைந்தது ஆர்வம் ஏறியது. மூளை விரிவடையத் தொடங்கியது. ஆயுதங்களை செய்தான். ஊர்திகளை உருவாக்கினான். ஆடையின்றித் துவண்டவன் ஆடை அலங்காரத்தில் எழில் கொண்டு விளங்கினான். பறவைகளைக் கண்டான் விமானம் படைத்தான். பாயும் மீன்களைக் கண்டான் படகினைப் படைத்தான். காலம் உருண்டோடியது. பெருமை மிக்க அறிவியல் மேதைகள் இம் மண்ணில் தோன்றினர். டாவின்ஸி பறக்கும் தட்டை உருவாக்கிப் பறந்தான். ரைட் சகோதரர்கள் ஆகாய விமானத்தை உருவாக்கினார். தோமஸ்அல்வா எடிசன் மின்விளக்குகளைக் கொண்டு பூமியை அழகு செய்தான். அறிவியலாளரை விட ஒரு சாதாரண பாதிரியார் கூட நிலக்கரி ஆவி விளக்கைக் கண்டு பிடித்தார்.

இயற்கையை அனுபவிக்கப் பிறந்த மனிதன் இயற்கையாலேயே அறிவியலில் மூழ்கினான். முதன் முதலில் கண்ட லோகம் செப்பு. இது மின்சாரத்திற்கு மட்டும் அல்ல நாம் அழகிற்கு அணியும் தங்கத்திலும் சேர்க்கப் படுகின்றது. பயந்து ஒடுங்கி வாழாது இறைவன் தனக்கு பரிசாகக் கொடுத்த சிறிய மூளையைக் கொண்டு மாட மாளிகைகள், கோட கோபுரங்கள், கண் கவர் காட்சிகள் கொண்ட எத்தனை படைப்புக்களைப் படைத்து மகிழ்ந்தான். கியூரி அம்மையார், யூரிககாரி போன்ற வைத்திய நிபுணர்கள் தோன்றினர். உலகையே ஆட்டிப்படைத்த அம்மை நோய்த் தடுப்பு மருந்தைக் கண்டனர். பென்சிலின் மருந்தையும் கண்டனர்.

அறிவியல் என்னும் புதுமையான படைப்பில் மனிதனின் புலன்கள் ஈடுபடத் தொடங்கியது. தன் அறைக்குள் இருந்த வண்ணமே உலகிலே நடக்கும் செய்தி கள், நிகழ்வுகளை தொலைக்காட்சியில் காண்கின்றான். தொலைபேசி, பேசும்படம் போன்றவைகளும் எமக்குச் சான்றுகளாக உள்ளன. எதிர் ஒலி கேட்டு வானொலி

## ஆக்கத்திற்கா?

படைத்தவன் இன்று இன்டர்நெட் என்னும் கருவியில் மனிதனின் மூளைக்கு அடுத்த செயல்பாடுகள் கேள்வி பதில், ஆள்மாற்றம் போன்ற பலவற்றையும் நாம் காண்கின்றோம். இத்துடன் ஓய்ந்ததா மனித இனம் விந்தையிலும் விந்தை யான செயல்கள் பல புரிந்தான். நோயுற்ற இதயத்தை மாற்றினான். கண் இழந்தவனுக்கு மறுகண் பொருத்தி ஒளியைக் கொடுத்தான். சத்திர சிகிச்சையினால் எத்தனையோ மக்கள் வாழ்வு மறுமலர்ச்சி அடைந்தது.

உலகினை ஆண்டு நன்மை செய்ய விழைந்த மனிதன் தின்மைகளையும் செய்யத் தொடங்கினான். இதற்குக் காரணம் அறிவியல் கிரகங்களின் சஞ்சாரம், மாற்றங்கள், புவியின் நிகழ்வுகளைக் கண்டறிய எத்தனையோ ராக்கெட்டுக்களை உருவாக்கி மேலே வலம் வர விட்டார்கள். எத்தனையோ விதமான அணுகுண்டுகள், நச்சுக் காற்றுகள், எறிகணைகள், வெடிமருந்துகளைக் கண்டுபிடித்தான். தன் எண்ணப்படி எதிரிகளைத் தாக்குவ திலும் மனித இனம் அழிந்துகொண்டே போகின்றது. நாட்டுக்கு நாடு போர் தொடுத்து நாடே அழிகின்றது. ஒரு மணிநேரத்தில் உலகம் முழுவதையும் அழிக்கவல்ல கருவி ரஷ்யாவிடம் உண்டு. அமெரிக்கா, ரஷ்யா என்பன அறிவி யல் ஆக்கத்திலும் அழிவிலும் சங்க காலம் தொட்டே பெயர் பெற்று வியங்கியது. இன்று நம் தாய் நாடான இந்தியா சகல விஞ்ஞானத்திலும் வெற்றி கண்டுள்ளது. பூமியின் உப கிரக மாகிய சந்திரனில் மனிதன் காலடி வைத்ததும் அறிவியல் ஆக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டல்லவா? அறிவியல் விந்தை யில் முதலிடம் பெற்ற அமெரிக்காவிலே மிகவும் முக்கிய மான 110 மாடிக் கோபுரத்தை 2001ம் ஆண்டு விமானத்தால் இடித்து சுக்குநூறாக்கிய கொடூரச் செயலை நாம் மறக்க முடியுமா? ஜப்பானிலே குண்டு வீச்சினால் மனித இனம் வாழமுடியாததும், அங்கவீனமான குழந்தைகள் பிறப்பதும், இன்னமும் புல்லே முளைக்காத இடங்களும் உண்டு. இதில் சோமாலியா என்னும் இடம் குறிப்பிடத்தக்கது. வியட்நாம் என்னும் இடம் பல வருடங் களாக யுத்த பூமியாக இருந்ததும் நாம் அறிந்ததே. இன்று நம் சகோதரர்கள் இலங்கை வாழ் மக்கள் பட்ட அவதி நிலைகள் எதனால்? தீய சக்திகளை உருவாக்கும் அறிவியல் உலகினிலே சகல ஜீவராசி களையும் ஆட் கொண்டு மாண்டு மடிய வைக்கின்றது.

அறிவியல் ஆக்கத்திற்கென்று படைத்த பொருள் அழிவிற்கும் பக்க காரணமாகவுள்ளது. ஆண் பெண் உறவின்றி ஓர் உயிரையே உருவாக்கும் வல்லமை மிக்கது அறிவியல். ஆதிமனிதன் வாழ வழிகாணாது தடுமாறி னான். இன்றைய மனிதனோ அறிவியலின் விந்தையில் தடுமாறுகின்றான். என்ன நடக்குமோ எப்படி வாழ்வோம் என்று எம் எதிர்கால சந்ததியை உருவாக்கும் சிறார்கள் எப்படி? எதிர்காலம் ஆக்கத்திற்கா? அழிவிற்கா? என்று ஏங்கித் தவிக்கின்றார்கள்.

நாளும் வளர்ந்து வரும் பிரமாண்டமான அறிவியல் கண்டுபிடிப்புக்களும், அதன் பயன்பாட்டுச்

## அழிவிற்கா?

செய்திகளும் செய்தித்தாள் மூலமும் வானொலி, தொலைக் காட்சி மூலமும் மக்கள் அறிந்து கொள்கின்றார்கள். மண்ணில் இருந்து விண்ணைத் தொட்டது அறிவியல் ஆனால் விண்ணை இடித்து மண்ணில் கொட்டாது காப்பது நம் கடமை. ஆதலால் நாம் நல்லவற்றை அறிந்து எடுத்து தீயதை விலக்கி, வறுமை .நோய், சாவு என்பவற்றில் இருந்து விடுதலை பெற்று வாழ வேண்டும்.

ஆம்! மாணவ மணிகளே! அறிவியல் உங்கள் வாழ்விற்கு வித்திடட்டும். ஆக்கத்தை வரவேற்று அழிவை அகற்றுங்கள். மனிதநேயம் கொண்டு பண்புடன் வாழ ஆக்கம் தான் முக்கியமானது. இந்த லங்கா மாதா பெற்றெடுத்த அன்புச் செல்வங்களான நாம் சிந்தித்து செயல் புரிய வேண்டும். வன் செயல்களால், போர் முழக்கங்களால் கை இழந்து, கால் இழந்து, கண் இழந்து தவிக்கும் நம் சகோதரர்களை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள் . அவர்கள் வாழ்க்கைக்கு எப்படி வழிசமைப்பது என்று சிந்தியுங்கள். அழிவுப்பாதையை விட்டு ஆக்கப்பாதையில் முன்னேறிச் செல்வோம்.

வாழ்க! அறிவியல் வளர்க! அறிவியல் ஆக்கங்கள்.

டெ.மரியஹரந்து நாயகி
கொழும்புத்துறை

# பெண்களின் செயற்திறன்

இறைவன் படைப்புக்களில் உயிரினங்கள் யாவையும் ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அதில் மனிதகுலத்தில் பெண்கள் மேன்மையானவர்களாயும், மென்மையான்வர்களாயும் உலகம் போற்றப்படுபவராயும் விளக்குகின்றனர். பெண்ணினத்தினாலேயே உலகம் ஒரு உந்து சக்தியைப் பெற்றிருக்கின்றது. இவர்கள் மூலமாகவே வருங்கால சமுதாயம் உருவாக்கப்பட்டு வளர்ச்சிப்படிகளில் இக் காலகட்டத்தில் பெண்களின் செயற்திறன்கள்தான் தலைதூக்கி நிற்கின்றதென்பது யாவரும் அறிந்ததே. குடும்பத்திற்கு தலைவியாகவும், நாட்டிற்கு சேவை செய்யும் மனப்பான்மை உள்ளவர்களாகவும், உடல் நலமளிக்கும் மருத்துவராயும், நீதித்துறைக்கே சட்டத்தரணியாகவும், கல்வி அறிவுட்டும் ஆசிரியர்களாகவும், பல்வேறு விதங்க ளில் பணிபுரிந்து நாட்டை ஆளும் மகாராணிகளாகவும், துறவிகளாகவும் பொறுப்புணர்வுடன் சேவை செய்து வருகின்றனர். நாட்டின் முதுகெலும்பாக கருதப்படும் இவர்கள் கூர்ந்த அறிவும் நிறைந்த ஆற்றலும் உள்ளவர் கள். எத்துறையிலும் ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர் களல்ல என்பதை நிரூபிக்க தம் திறமைகளை வெளிக் கொணர்பவராவர். குடும்பப் பெண்களை எடுத்துக் கொண் டால் காலையிலிருந்து மாலை வரை அயராது உழைத்து குடும்பத்தில் உள்ளவர்க்கு எந்தநேரம் எது தேவை என்பதை உணர்ந்து கண்ணும் கருத்துமாக இயந்திரம் போல் உழைத்து அமைதி, சாந்தம், பகிர்வு என்பவற்றை கடைப்பிடித்து ஓய்வின்றி உழைக்கின்றனர். வேறு சிலர் சோம்பேறிகளாகவும் ஒரு திறமையற்றவர்களாகவும் சமைத்து உண்டு முடித்தால் போதும் என்ற மனநிலை யுடனும் வாழ்கின்றார்கள். தோட்டத்துறை மக்களை எடுத்துக் கொண்டால் கூலி வேலை செய்து பணம் சம்பாதித்து தம் தேவைகளைப் பூர்த்தி செய்து சுறுசுறுப்புடன் வாழ்கின்றார்கள். இன்னமும் இல்லத்துக்குத் தேவையான தையல்கலை, பின்னற்கலை, அலங்கார வேலைகள் அழகு படுத்தும் முறை மூலம் தம் அறிவைப் பயன்படுத்திக் கொள்கி ன்றனர். அதே வேளை சிலர் ஆபாசமான உடைகளை அணிந்து தம்மை அலங்கரிப்பதால் பெண்ணினத்தின் மேன்மை சீர்குலைந்து மானம் மரியாதை நசுக்கப்படுகிறது.

கற்பில் சிறந்த கண்ணகியாகவும், வாழ்க்கைக்கு தக்க துணைதேடும் தமயந்தியாகவும், துர்ச்சாதனனின் சூழ்ச்சியால் திரௌபதிக்கு துகிலுரியப்பட்ட போது அவனது கை ஓயும் வரைக்கு துகில் பெருகப்பட்டது. இலக்கிய வரலாறுகளில் பெண்களின் மகத்துவம் எத்தகையது என்பதை அறிந்தவர்களாய் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றிற்கு முதலிடம் கொடுத்து கற்பில் சிறந்த மகளிராக திகழ வேண்டும். பிற நல சேவைகளில் ஈடுபட்டு ஒத்துழைப்பு வழங்கும் அபிமான நட்சத்திரங்களாக விளங்கி வீட்டிற்கு கிடைக்கும் வருமானத்தை கட்டுப்பாடு டன் செலவு செய்து மிகுதிப்படுத்தி குடும்பத்தின் வசதிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இளம் பெண்கள் கூட தம் வாழ்க்கைக்குத் தேவையான உபதொழில்களை மேற் கொண்டு தமக்கென சிறு தொழில்களைப் புரிந்து வாழ்வில் விருத்தியடைகின்றனர். கலைத்துறை, விஞ்ஞானத்துறை களில் தேர்ச்சி பெற்று பெண்ணினத்திற்கு பெருமை சேர்கின்றனர். மகளிர் அலங்கரிப்பில் ஆடை,ஆபரண ங்கள், அழகுசாதனப் பொருட்கள், முகம் ஒளி பெறுவதற் கான உருமாற்றுத்திறமைகளில் வியாபாரிகளுக்கு வருமானம் பெறும்படியான அலங்கரிப்பினால் தம்மை எடுத்துக் காட்டாக விளங்கவைத்து நவ நாகரிகத்தில் தாண்ட வமாடிக் கொண்டிருக்கும் பெண்கள் சற்று சிந்திக்க வேண்டும். எத்தனையோ ஏழைஎளியவர்களின் வறுமையை பொருட்படுத்தாது கண்டும் காணாதவர்களாகி விடுகின்றனர். பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பதற்கிணங்க அதே பெண்கள் ஏழைகளின் துன்பத்தில் பங்கெடுத்து தானதர்மத்தின் வழியாக புண்ணிய நலன்களில் ஒத்துழைப்பு வழங்கினால் தான் பெண்களுக்கு அதாவது மகளிருக்கு பெருமையாகும். கணவன் மனைவி ஒன்றித்து வாழ்வதும், பிள்ளைகளை கண்காணிப்பவர்கள் பெண்கள். தம் ஆயுள்காலம் முழுவதும் ஓய்வின்றி கடமைகளில் தவறாது எத்தனை எத்தனை துன்பங்களைக் கடந்து செல்கின்றனர். நோயாளிகளாக இருந்தாலும் தம் இயலாமையிலும் பொறுமையுடன் செயற்பட்டு வருகின்றனர். மகளிர் எனப்படுபவர்கள் சிறுவர்களின் முன்னேற்றப் பாதைக்கு வழிகாட்டியாக இருந்து கல்வியில் சிறந்து விழங்க பேருதவி புரிந்தால் வருங்காலத்தில் ஒளி மயமான வாழ்வை எதிர்நோக்க முடியும். உறுதியான செயற்திறனுள்ள மகளிராக மாற்றிக் கொள்வதுடன் அனைவரையும் அன்பு செய்து தியாக மனப்பான்மையோடு வாழ முன்வரவேண்டும். "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" பெண் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே எமது கடந்த கால தவறுகளை விடுத்து பெற்றோர், பெரியோர், முதியோர் எம்மை சேர்ந்தவர்களுக்கும் ஆல மரமாக உதவுவோம். ஒருசில திருத்த நற்செயல்களினால் எம்மையே உருவாக்கி மகளிருக்குரிய அந்தஸ்தை விலக விடாது கடைப்பிடித்து பொறுமை, இரக்கம், ஈகை போன்ற அன்பின் அரவணைப்பினால் எமது வாழ்வு மற்றவருக்கு பிரதிபலிக்க நாம் கள்ளம் கபடமற்ற தூய்மையான வாழ்வி னால் அடுத்தவரை ஈர்த்தெடுக்கும் சக்தியாகி அன்பே கடவுள் என்பது போல் அன்பான மகளிராக வாழ்ந்து எதிர்கால சமுதாயத்தின் சிற்பிகளாவோம்.

பேணபேற் | இந்திராணி
கொழும்புத்துறை

# எமது சூழலுக்கு யார் பொறுப்பு?

சூசன்-பிலிப்

மின்சாரத்தையும் இயற்கை ஆதாரங்களையும் சேமிக்க சில வழிகளை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் எப்படிப் பட்ட வழிகள்?

குளியலறைக்குள், ஷவர் குழாயடியில் நிற்கும் நேரத்தில் ஒரு நிமிடத்தை குறைக்கலாம். கிணற்று தண்ணீரை வாழியால் அள்ளி பயன்படுத்தலாம்.

உங்கள் வாகனத்தை அடிக்கடிப் பயன்படுத்துவதில்லை என்று உறுதியளிக்கலாம்.

நீர் இறைக்கும் இயந்திரம் உங்கள் வீட்டு மோட்டார் ஏர் கண்டிஷனர் அல்லது குக்கர் ஹீட்டர் இயங்குவதை நிறுத்துவதாக உறுதியளிக்கலாம்.

இது போன்ற எளிய வழிகள்தான். அட இவ்வளவு தானா! 2007 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜப்பானில் உள்ள மெக்டானல்ட் நிறுவனத்தின் கிளை ஒரு விளம்பரத்தை வெளியிட்டது.

புவி வெப்பத்தைக் குறைக்கப் பல்வேறு வழிகளைக் கடைப்பிடிப்பதாக உறுதியளிப்போருக்கு 50சதவிகித விலைத்தள்ளுபடியில் பிக் மேக் ஹாம்பர்கர் வழங்கிட அந்த நிறுவனம் முன் வந்தது.

இந்தச் சலுகையைப் பெற அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஜப்பான் நாட்டுச் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் இணையத்தளத்திற்கு சென்று ஒரு விண்ணப்பப்படிவத்தை நிரப்ப வேண்டும்.

மெக்டானல்ட்போல, ஜப்பானில் சுமார் 80 தொழில் நிறுவனங்கள் புவி வெப்பத்திற்கு எதிரான பேராட்டத்திற்கு மக்களை ஈர்ப்பதற்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளன. நம்நாட்டிலும் இப்படிப்பட்ட சலுகைத்திட்டங்கள் மக்கள் விளிப்புணர்வை விரிவு படுத்துகின்றன. ஆனால், நாம் ஒவ்வொருவரும் முழுமனத்தோடு உறுதியெடுத்துச் செயல்பட்டால் தான், நம் பூமி பாதுகாப்பாக இருக்கும்.

மின்சாரத்தைப் பயன்படுத்துவது அதிகரிக்க அதிகரிக்க புவி வெப்பமும் அதிகரிக்கிறது. எனவே, மின்சாரம் பயன்படுத்துவதை நாம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல், எரிபொருள் பயன்பாட்டையும் குறைக்க வேண்டும். இயற்கை ஆதாரங்களைப் பாதுகாப்பதும் முக்கியம். ஆகவே, ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நீங்களும் நானும் செய்ய வேண்டிய சில செயல்களை இங்கே பார்ப்போம். முதலாவதாக 'சுவிட்ச் ஆஃப் செய்யுங்கள். அறையை விட்டு வெளியே சென்றால், ஐந்தே நிமிடத்தில் திரும்பி வந்து விடுவதாக இருந்தால் கூட, மின் விளக்குகளை அணைத்து விடுங்கள். மின் விசிறிகளை நிறுத்தி விடுங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து முடித்து விட்டால் அதை முற்றிலுமாக சுவிட்ஆஃப் செய்யுங்கள். ரிமோட் கண்ட்ரோலைப் பயன்படுத்தி அதை ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டாம்.

மின்சாரத்தைச் சேமிக்கக்கூடிய வேறு சில வழிகள்: மின்சாரத்தை அதிகமாக உட்கொள்ளும் வழக்கமான விளக்குகளை விட்டு விட்டு குறைவான மின்சாரமே தேவைப்படுகிற விளக்குகளை (CFI விளக்குகள்)பொருத்துங்கள் அப்படிப்பட்ட எனர்ஜி சேவர் விளக்குகள் இன்று பல வடிவங்களில் கிடைக்கின்றன.

மின் இணைப்பிடத்தில் மல்டிபிள் பிளக் எனப்படும் பல முனை இணைப்பிகளைப் பயன்படுத்தாதீர்கள். மல்டிபிள் பிளக்குகள் மின்சாரத்தை வீணாக்கக்கூடியவை.

கோடைப்பருவத்தில் ஏர்-கண்டிஷனர் பயன்படுத்துவதைக் குறைத்து விடுங்கள். அதற்குப் பதிலாக உடலுக்குக் குளுமையூட்டும் ஆடைகளை அணிந்து கொள்ளலாம், அறையை நன்கு காற்றோட்டமுள்ளதாக ஆக்கலாம். பதிய மின் கருவி எதையாவது வாங்கும் போது அது எந்த அளவுக்கு மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும் என்பதைக் கவனிக்க வேண்டும். குறைவான மின்சாரம் தேவைப்படுகிற கருவிகளை வாங்குங்கள். சலவை இயந்திரங்ளை பயன்படுத்துகிறபோது, ஒவ்வொரு முறையும் அதன் முழுத்திறனுக்கும் ஏற்ப துணிகளைப் போடுவதால், மின்சாரமும் அதிகமாகச் செலவாகிறது, தண்ணீரும் அதிகமாகச் செலவாகிறது.

இப்படிப்பட்ட முயற்சிகளால் உங்கள் வீட்டு மின்சாரக் கட்டணம் குறையும் அதுமட்டுமல்ல, காற்று மண்டலத்தில் கலக்கிற காரியமில வாயுவின் அளவும் குறையும். பெற்றோல் அல்லது டீசல் சேமிப்புக்கான வழிகளும் உள்ளன.

உங்கள் பெற்றோர் ஒரு வாகனம் வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தால், அவர்களோடு மாசுக்கட்டுப்பாடு விதிகள் குறித்தும் பேசுங்கள். எரிபொருளை சிக்கனமாக உட்கொள்ளக்கூடிய, சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத வண்டியாகப் பார்த்து வாங்கச் சொல்லுங்கள்.

உங்கள் வீட்டில் ஏற்கனவே ஒரு வண்டி இருந்தால் கண்டிப்பாக அ[illegible]தேவை என்கிற நேரத்தில் மட்டும் பயன்படுத்துங்கள். முடி[illegible]ரை நடந்தே சென்று வாருங்கள். முடிந்த போதெல்லாம் [illegible]துப் போக்குவரத்து வசதியை (பஸ், ஆட்டோ) பயன்படுத்துங்கள். ஒரு சைக்கிள் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். சைக்கிள் ஓட்டுவது நல்ல உடற்பயிற்சியாகவும் இருக்கும்.

இவையெல்லாம் ஒவ்வொரு தனி மனிதரும் பயன்படுத்துகிற எரிபொருள் அளவைக் குறைக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு எரிபொருள் சேமிக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேறுவது குறைகிறது.

அடுத்து இயற்கை ஆதாரங்களுக்கு வருவோம். தண்ணீரைப் பயன்படுத்தும் போது, அதை வீணாக்கக் கூடாது என்பதில் கவனமாக இருங்கள்.

பல் துலக்கும்போது குழாயில் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கவிடாதீர்கள். குளிக்கும்தண்ணீர் அளவைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

முடிந்த அளவுக்கு மறுசுழற்சியில் ஈடுபடுங்கள். காய்கறி அலசிய தண்ணீரை அப்படியே வைத்திருக்கச் சொல்லி, அந்தத் தண்ணீரைத் தோட்டத்தில்பாய்ச்சுங்கள். சிறுதானிய பயிர்கள்முலம் உங்கள் தேவையை நிறைவேற்ற முயலுங்கள். காகிதத்தை எளிதாக மறுசுழற்சி செய்யலாம். குறிப்புக்கள் எழுதுவதற்கான ஏடுகளாகவும், எழுதிப்பார்ப்பதற்கான தாள்களாகவும் பழைய அஞ்சலுறைகளையும் விளம்பர நோட்டீசுகளின் பின்பக்கத்தையும் பயன்படுத்தலாம்.

உணவை வீணாக்காதீர்கள். அது மதிப்பு மிக்கது. எவ்வளவு சாப்பிட முடியுமோ அந்த அளவுக்கு மட்டுமே எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடுங்கள்.

வீட்டில் தயாரான உணவுகளை மட்டுமே பயன்படுத்துங்கள். உறைய வைக்கப்கட்ட உணவுகளைச் சூடாக்கவும் பராமரித்து வைக்கவும் அதிகமான மின்சாரம் தேவைப்படும்.

குப்பையை மக்கும் ஆர்கானிக் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்து வைத்துக் கொள்ளுங்கள். தோட்டத்தில் ரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரமாக, மக்கும் ஆர்கானிக் குப்பையைப் பயன்னடுத்தலாம்.

ஒரு மரத்தை நடுங்கள். அல்லது ஒரு செடியையாவது ஊன்றுங்கள். நீங்கள் வசிப்பது அடுக்குமாடிக் குடியிருப்பு என்றால் வீட்டின் பல்கனியிலோ மொட்டைமாடியிலோ ஒரு சிறிய தோட்டத்தை உருவாக்குங்கள்.

செடிகளும் மரங்களும் கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு ஆக்சியனை கொடுக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சுற்றுச் சூழலுக்கு நாம் இழைத்து வரும் தீங்கைச் சரிப்படுத்தக் குறைந்த பட்சமாக நாம் செய்யக்கூடியவை இவைதான். இப்படிப்பட்ட சிறிய செயல்களால் புவி வெப்பத்தைத் தடுக்கவோ தாமதப்படுத்தவோ முடியுமா? எமது சூழலுக்கு யார் பொறுப்பு? பசுமைக் குடில் வாயுக்கள் பற்றிப் படித்த போது, இதற்கான ஒரு முன்னுதாரணத்தைப் பார்த்தோம், நினைவிருக்கிறதா?

காற்று மண்டலத்தில் அடங்கியுள்ள பொருள்களில் ஒரே ஒரு சதவிகிதம் அதிகரித்ததால் தான் இவ்வளவு மாற்றமும் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தோம். ஆகவே, நிச்சயம் நமது சிறு முயற்சியும் நல்ல பலனில் முடியும்.

அப்புறம், இந்த செய்தியை பலருக்கும் எடுத்துச் சொல்லுங்கள். குடும்பத்தினர், நண்பர்கள், வகுப்புத்தோழர்கள், பக்கத்துவீட்டார், இன்னும் யார் யாரிடமெல்லாம் சொல்ல முடியுமோ அவர்களிடமெல்லாம் சொல்லுங்கள்.


பூமிசூடாவது பற்றியும், அதனால் ஏற்படும் அபாயங்கள் பற்றியும், நம் உலகத்தைக் காப்பாற்ற நாம் செய்யக்கூடிய எளிய செயல்கள் பற்றியும் எடுத்துச் சொல்லுங்கள்.ஒவ்வொரு சிறு செயலிலும் பலனளிக்கும். நாம் எல்லோரும் நம்முடைய சிறு பங்கைச் செலுத்தினால் எமதுசூழலும் சொர்க்கமாகும். யாருக்குத் தெரியும், எரி பொருளையும் இயற்கை ஆதாரங்களையும் மிச்சப்படுத்தி சேமிக்கப்போகிற பணத்தை வைத்துக்கொண்டு, ஒருநாள் வருடத்திற்கே கூட நீங்கள் பயணம் போகலாம்.அங்கே நானுக்கையும் அதன்குட்டிகளையும் நீங்கள் பார்த்தாலும் பார்க்கலாம். குளுகுளுவென்ற அனுபவமாக அது அமையும், சரிதானே?

## மன்றங்களுக்கிடையிலான போட்டி

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலை இலக்கிய நாடக மன்றங்களுக்கிடையிலான கலை ஆக்கத்திறன் போட்டிகள்/ நாடகம் / நாட்டிய நாடகம் / வில்லுப்பாட்டு /தனிநடிப்பு /குழுநடனம் / தனி நடனம் / புகைப்படம் /நாடகவாக்கம்/கவிதை/பாடலாக்கம்/ஓவியம்/சிறுகதை/போன்ற போட்டிகள்/நடாத்தப்படவுள்ளதாகவும் பதிவு செய்யப் பட்ட மன்றங்கள் கலந்து பயன்பெற பிரதேச செயலக கலாச்சார அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அபிராமி பாலமுரளி அறிவித்துள்ளார்!

## அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டி

அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத் திறன் போட்டி 2018க்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளது. சிறுகதை,பாடல்,கவிதை,சிறுவர் ஆக்கம், ஓவியம்,குறுநாடகம்,போன்ற போட்டிகளுக்கான விண்ணப்பங்களை உங்கள் தலைமை அலுவலகத்தில் பெற்று 2018-05-31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், உள்ளகஅலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு, 8ம் மாடி செத்சிரிபாய புத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



சிறுகதை

# ஓடிப் போனவள்

அழகிய பூக்களாக ஏதோ தூரத்தில் தெரிகிறது. வித்தியா பேரூந்திலிருந் தவாறே பார்க்கிறாள். மறுகணம் அவள் பார்த்த பூக்கள் கொக்குகள் போல தெரிகிறது. பேருந்து விரைந்து அந்த இடத்தை கடக்கும் போதுதான் உணருகின்றாள் பருத்திப்பஞ்சுகள் வெடித்தி ருக்கின்றது. தூரத்தில் தெரிந்த இயற்கை அழகு நெருங்க முன் ஏதோ சிந்திக்க வைத்தாலும் எதிர்கொள்ளும் போது நிஜம் தெரி கின்றது. வித்தியாவின் மனதில் வெடித்துப் பறக்கும் நினைவுகள் பின் தொடர்ந்து வந்து கொண்டு இருந்தது அவள் மனதினூடாக........

பேருந்தில் மூன்று இருக்கைகள் நடுவில் வித்தியா அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஸ்மாட் போனுடன் இணைப்பிலிருந் தார்கள் வலப்பக்கத்தில் இருப்பவள் காதுக்குள் செருகிய வண்ணம் பாடலைக் கோட்டுக் கொண்டிருக்கிறாள். இடப்பக்கம் இருப்பவள் முகப்புத்தகத்துக்குள் முகம் புதைத்திருக்கின்றாள். காலை வெயில் மெல்ல எகிறத் தொடங்க இனி இயற்கையை ரசிக்க முடியாது நடு வில் இருப்பதால் சரிவதும் சிரமம் நிமிர்ந்தபடியே தனது நபரிடைத் தொடர் பாடலை வெளிப்படுத்த முடிவெடுக்கிறாள்.

சறோஜா ..காலத்தில் மூன்று பெண்கள் கூடியிருந்தால் அது குதுகல மாகவும் முஸ்பாத்தியாகவுமிருந்திருக்கும். கறுப்பு வெள்ளை காலம் போய் இப்போ கலர் கனவுகளுடன் இது சமந்தா காலம். அச மந்தமாகவே பயணம் தொடர்ந்தது. கையடக்கத் தொலைபேசிக ளில் "சார்ச்" குறைந்து கொண்டு போகவே வித்தியாவைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினார்கள். அக்கம் பக்கம் இருப்பவர்கள் புன்ன கைப்பது வித்தியாவிற்கு மகிழ்ச்சிதான்.....

உமது பெயர் "வசந்தி" எங்க போறீர் "வவுனியாவுக்கு" நீங்கள் அக்கா கொழும்புக்கு இன்ரவியூக்கு போறன். வசந்தி ஏன் டல்லா இருக்கிற மாதிரி இருக்குது. "இல்ல இல்லையே" சிறிது மௌனம் எல்லாம் முடிஞ்சுதக்கா "என்ன" தொலை பேசியைப் பார்த்தாள் என்ர வாழ்க்கையைச் சொன்நன் வித்தியாவின் முக பாவம் வசந் தியை ஆறுதல்ப்படுத்துவதாக இருந்தது. அருகில் இருக்கும் கவிதா வும் பாடல் கோட்பதை நிறுத்திவிட்டு இந்த உரையாடலைக் கவணித் துக் கொண்டிருந்தாள் அவளது முகத்தில் ஆச்சரியம் மேலோங்கியி ருந்தது. நான் "ஓடிப் போனவள்" அது தான் இந்த வாட்டம் நீங்கள் எங்கட ஊரில கோட்டுப் பாருங்கோ எல்லாரும் என்ன நல்ல பிள்ளை என்டுதான் சொல்லுவினம் பாரு ங்கோ. நல்லாப்படிப்பன் எண்டும் பாராட்டுவினம் எண் டாப் பாருங்கோவன்.

"சரியம்மா ஏன் ஓடிப்போனீர்" உயர்தரப் பரீட் சையில பாஸ் பண்ணின்னான் கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறன். "ம்ம்.." "தண்ணீரைத் தாங்கோ" இந்தாரும் "அது சரியம்மா ஏன் ஓடிப்போனீர்" ஓடிப் போவமா என்று என்னைக் காதலிச்ச "வரன்" கேட்டார் நானும் சரி எண்டு ஓடிப் பாப்பம் எண்டுதான்...

பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது "வரன்" என்பவன் பின்னால அடிக்கடி வருவான் அவனும் அவன்ர மூஞ்சியும் அவனை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. "அப்ப ஏன் ஓடிப்போனீர்" பின்னால வரும் அவனுக்கு நான் ஒருநாள் செருப்பால அடிச்சனான். ஆக்ரோசமா அவனை பல தடவைகள் அவமானப்படுத்தியிருக்கிறன். காரணம் பின்னால வாறதும் காதலிக்கச் சொல்லி கேட்கிறதும் எனக்கு சுத்த மாப் பிடிக்கவில்லை. உறுதியாய் தான் இருந்தனான் அக்கா என்ர நண்பிகள் தான் அவன் பாவம் எண்டு சொல்லிச்சினம். இவனைப் போல ஒருத்தன் தேடினாலும் கிடைக்கமாட்டான் எண்டெல்லாம் நண்பிகள் சொன்னதால செருப்பால அடிச்ச நானே சிரிப்பால அனைக்கிற அளவுக்கு மனம் மாறிப் போனன். திடீரெண்டு ஒருநாள் ஓடிப்போவமா என்று கோட்டான் நானும் உடன்பட்டன் பிறகு தான் எல்லாம் தெரிஞ்சது........ அது மட்டுமல்ல அவன் திருமணமானவன் என்பதும்.வித்தியா வசந்தியின் முதுகை லேசாக வருடினாள் கண் ணீரைத் துடைப்பதில் இருவரும் முயன்றனர்.

இதுவரை எதுவும் பேசாமலிருந்த கவிதா கேட்டாள் "அப்புறம் என்ன நடந்தது" எங்கட வீட்டுக்காறர் எங்களைப் பிரிச்சிட் டாங்க பெலிசில வரனை விசாரிச்சாங்க அப்போது தான் விசார



ஓடிப் போனவள்

ஜோக்கியன்

ணையில தெரிய வந்தது அவன் ஏற்கனவே திருமணமானவன் என் பது........

லூசா உமக்கு படிச்சதும் பயனில்லாமப் போச்சுது. யாழ்ப் பாணத்தில இருக்கிற பெண்கள் இப்ப ஆக்ரோசமா இருக்கிறியள் ஆனா முடிவில தெளிவற்று இருக்கிறியள். பெண்களிற்கு ஆணித்த னம் இருக்க வேண்டும். எனக்கும் இப்படித்தான் பாரும் ஒரு சம்ப வம் இல்லை இல்லை பல சம்பவம் நடந்திருக்கு நானும் யாழ்ப்பா ணம் தான் இப்ப கனடாவில சிற்றிசனாயிட்டன்.நயினாதீவு நாகபூ சணி அம்மன் தேருக்கு வந்தனான். எல்லாம் முடிஞ்சு கனடா போக கொழும்புக்குப் போறன். கனடாவில ஒருத்தன் "ஐ லவ் யூ" என்று சொன்னான் என்னையே திருமணம் செய்து கொள்ள விரும்புவதா கவும் சொன்னான். அவனை எனக்குத் தொரியாது அறிமுகமில்லாத வன் ஆனாலும் கான்சம்தான் ரீ சாப்பிடுவம் வாங்க அங்க போய் மனம் விட்டுப் பேசலாம் என்றேன் இருவரும் "ரெஸ்ரேரண்டில்" அமர்ந்து கதைத்தோம். பெயர் விக்னேஸ் என்று அறிமுகப்படுத்தி னான், இஞ்ச பாருங்க விக்னேஷ் என்று இடைமறித்து நான் பேசி னேன்.

என்னை விரும்பும் உரிமை உங்களிற்கு இருக்கிறது. அதே போல உங்களை நிராகரிக்கும் உரிமையும் எனக்கு இருக்கி றது. உங்கள் குடும்பப் பின்னணி வேறு எங்கள் குடும்பப் பின்னணி வேறு இருவரும் திருமணம் செய்து கொள்ளும் தகுதிகள் இருந்தும் எம்மால் இணைந்து வாழ முடியாது உமக்கு என்னைப் பிடித்திருக்கிறது என்றால் நாம் நண்பர்களாக இருப்போம். என் றேன் பிறகு விக்னேஸ் வேறு வழியில் சென்றுவிட்டார்.

வசநந்தி நீர் செருப்பால அடிப்பன் என்ற போது ஆக்ரோச மிருந்தது. ஆனால் முடிவு தொளிவற்றுள்ளது. எனக்கோ ஆணித்தன மாக விக்னேசிற்கு கூறியதில் ஆனந்தம் இருந்தது. நானும் ஒரு வகையில் ஓடிப்போனவள் தான் யாழ்ப்பாணத்தில இருந்து கனடா வுக்கு போனதைச் சொல்லுறன். கவிதா, வித்தியா, வசந்தி மூவரும் தொடர்பு எண்களை பரிமாறிக் கொண்டார்கள் வித்தியா தொடர்ந் தாள் எனக்கு காதலில நம்பிக்க இல்லை திருமணத்திற்கு முன் காத லிப்பது எனக்கு சரிவராது. திருமணத்திற்குப் பின்பு தான் கணவ ரைக் காதலிப்பது என்ற முடிவில் இருக்கிறன். ஊரில பெற்றார்கள் பார்த்த பையனை எனக்கும் பிடித்து விட்டது ஆறு மாதத்தில் கலியா ணம் நடக்கும். வங்கில வேலைக்கு இன்றவியூ அது தான் கொழும் புக்குப் போறன்.

வசந்தி போன்ற இளம் பெண்கள் ஏமாற்றப்படுகின் றார்கள் காரணம் மென்மையான சுபாவம் குறைவடைவதனால் வனமையைக் கையாளுவது தான் அவர்களைப் பலவீனத்திற்குள் தள்ளுகின்றது. ஆனால் கவிதா உம்மைப் போன்ற பெண்கள் மென் மையாக விடையத்தை அனுகியதால் அதாவது "நோ" என்றாலும் அதை நோகாமல் சொல்லியதால் வலிகள் வாழ்க்கையில் வரா மலிக்க முடிந்திருக்கின்றது. வசந்தி சொல்லுறன் எண்டு குறை நினைக்காதயும் போனுடன் அதிம் "கனைக்ற்" ஆகாதயும் ஏனென்டா மனிதன் அல்லாத உயிரற்ற பொருட்களுடன் இனைப்பில் இருப்பவர்கள் மனச் சோர்விற்கு உள்ளா வார்கள் என்பது ஆய்வுகள் சொல்லியவை குறிப்பாக அம்மா அப்பாவேட நாங்கள் எப்பவும் இனைப்பிலிருக்கப் பழக வேண்டும்.

"ஓமக்கா" நான் வவுனியாவிற்கு போறதே பல்கலைகழக கல்வியைத் தொடரத்தான் என் போன்றவர்கள் ஏமா றாமலிருக்க படிப்பு முடிந்ததும் விழிப்புணர்வுகள் செய் வேன். மூவரும் "செல்பி" எடுத்துக் கொண்டார்கள்.

வவுனியா, கொழும்பு, கனடா பயணங்களில் வவுனியா வில் இறங்கிக் கொள்கிறாள் வசந்தி. வெடித்துப்பறக்கும் பருத்திப் பஞ்சு ஆடையாக ஆனது போல வசந்தி போகும் வரை கார்த்துக் கொண்டிருக்கிறாள் வித்தியா... கவிதா தனது விமான ரிக்கட்டை சரிபார்த்துக் கொண்டிருந்தாள்.

# ரோக்கியோ ஸ்ரோறி திரைப்படம்

- பயணி-

யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டம், சிறந்த திரைப் படமொன்றை ஒவ்வொரு மாதத்திலும் இலவசமாகக் காண்பித்து வருகின்றது. ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் பிறமொழித் திரைப்படங்கள் பலவும், மாற்று முயற்சிகளான – தமிழ்த் திரைப் படங்கள் .இரண்டும் இதுவரை காண்பிக்கப்பட்டுள்ளன. பங்குனி மாத நிகழ்ச்சியாக, "ரோக்கியோ ஸ்ரோறி" (1953) என்னும், உலகப் புகழ்பெற்ற யப்பானிய மொழித் திரைப்படம் காட்டப்பட்டது. உலகப் புகழ்பெற்ற திரைப்பட மேதையான யசுஜிரோ ஒசு இதன் நெறியாள ராவார்.

ஒனோமிச்சி என்ற சிறு நகரிலிருந்து, மிகத் தொலைவிலுள்ள ரோக்கியோ நகரத்திலுள்ள இரண்டு மக்களைச் சந்திக்க, சுக்கிச்சி



மற்றும் ரொமி ஹிரயாமா ஆகிய வயதுபோன தம்பதியினர் வருகின்றனர். மருத்துவரான மூத்த மகனும், அழகு நிலையம் நடத் தும் மூத்த மகளும் தமது தொழிலில் மூழ்கி இருக்கின்றமையால், பெற்றோருடன் நேரத்தைச் செலவளிக்கத் தயங்குகின்றனர். ஏற்கெ னவே யுத்தத்தின்போது காணாமல்போன இரண்டாவது மகனின் மனைவியான நொறிக்கோவும், ரோக்கியோவில் வசிக்கிறாள். மாமனையும் மாமியையும் அவள் மரியாதையுடன் பேணுகிறாள் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டுகின்றாள் அவர்களும் மன நெருக்கத்துடன் மகிழ்ச்சியடைகின்றனர். திரும்பி ஊருக்குச் சென்ற சில நாள்களில், மாமியார் கிழவி நோயினால் மரணமடை கிறாள். வீட்டில் கிழவரும் ஆசிரியையான இன்னொரு இளைய மகளும் மட்டும். மரணவீட்டுக்கு வந்த மூத்த மகனும் மகளும் மூன் றாவது மகனும், மரணச் சடங்கு நடந்த மறுநாளே – அவசரப்பட்டுத் தமது இடங்களுக்குத் திரும்புகின்றனர் மருமகள் மட்டும் சில நாள் கள் அங்கு தங்குகின்றாள். அண்ணன்களினதும் அக்காவினதும் சுய நலன் பற்றி, கோபத்துடன் இளையவள் அண்ணியிடம் குறைசொல் கிறாள் அவள் சமாதானப்படுத்துகிறாள். ரோக்கியோவில் மகிழ்ச்சி யாய்க் கழிந்த நாள் – மருமகளுடன் தங்கிய நாளேயென்றும், தான் சந்தித்த மிகச்சிறந்த பெண்மணி அவளென்றும் மனைவி கூறியதை, மருமகளிடம் மாமனார் தெரிவிக்கிறார். மேலும், இறந்துபோன தனது மகனை அவள் நினைத்துக்கொண்டிராமல், பொருத்தமான ஒருவரை மணந்து மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்றும் சொல்கி றார் இறந்த மனைவியின் விருப்பமும் அதுவேயெனவும் தெரிவிக்கி றார். மருமகள் நெகிழ்ந்துபோகிறாள். அவள் தமது இரத்த உறவி னள் அல்லவென்றாலும், அவள்தான் தன்னுடனும் மனைவியுடனும் மிக நெருக்கமானவள் என்றும் அவர் கூறுகிறார். அன்று மாலை,



தொடருந்தில் அவள் ரோக்கியோ திரும்புகிறாள் அவள் பயணப் படும் தொடருந்தைக் கியோக்கோ (இளைய மகள்), பாடசாலை யன்னலால் பார்த்துக்கொண்டிருப்பதுடன் படம் நிறைவடைகிறது.

செறிவான சம்பவங்களால் கட்டமைக்கப்படும் ஒரு குடும்பக் கதை. மனித உறவுகள் கால மாற்றத்தில் அடையும் மாற்றங்கள், பெற்றோரின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய பிள்ளைகள் இருப்பதில்லை என்ற புரிதல், தூரத்து மனிதரானாலும் அவர் ஆத் மார்த்தமான உறவை வெளிக்காட்டுதல், முதுமையின் தனிமை உணர்வு, இளமையின் கோப வெளிப்பாடு போன்றவை ஆழமான முறையில் சித்திரிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட வாழ்வுச் சூழலில் யப்பானிய மனிதர் சிலரின் நடத்தை களையும் உணர்வுகளையும் பற்றிய புரிதலையும் நாம் பெற்றுக்கொள்ள இயல்கிறது. நிலம்,



மொழி, பண்பாடு, காலம் ஆகியவற்றைக் கடந்து மானுடப் புரித லைச் சிறந்த கலைப்படைப்புகள் சாத்தியமாக்கும் என்பதற்கு, இத்தி ரைப்படம் சிறந்த உதாரணம். சிறந்த காட்சிப்படுத்தல்கள், பாத்திர உருவாக்கம் – நடிப்பு, இசை, செறிவான படத் தொகுப்பு போன் றவை அதற்குத் துணைசெய்கின்றன. "எல்லாக் காலங்களிலும் சிற ந்த திரைப்படங்களில் ஒன்றாக" இதனை, பிரித்தானியத் திரைப்ப டப் பயிற்சி நிறுவனத்தின் "சைற் அன்ட் சவுண்ட்" திரைப்பட இதழ், 2012 இல் தேர்வுசெய்தமை குறிக்கத்தக்கது.

இத்திரைப்படத்தின் நெறியாளரான யசுஜிரோ ஒசு, உலகத் திரைப்பட மேதைகளில் ஒருவர். "எல்லாக் காலங்களிலும் சிறந்த நெறியாளரில் ஒருவராக", "சைற் அன்ட் சவுண்ட்" இதழ் இவரை, 2002 ஆம் ஆண்டு தேர்வுசெய்துள்ளது! சுமார் 55 திரைப்படங் களை இவர் உருவாக்கியுள்ளார். அவற்றில் ரோக்கியோ ஸ்ரோறி (1953), லேற் ஸ்பிறிங் (1949), வ்ளோட்டிங் வீட்ஸ் (1959), அன் ஓட்டம் ஆஃவ்ரநூண் (1962) ஆகியவற்றை, மிகச் சிறந்த திரைப்ப டங்களாக உலகத் திரை விமர்சகர் போற்று கின்றனர்!

உலகத் திரைப்பட மேதைகளையும் அவர்தம் உன்னதப் படைப்புகளையும் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தும் வாசகர் வட்டச் செயற்பாடு, முக்கியமானது. கலை ஆர்வலர் இந்த நிகழ்ச்சிக ளில் தவறாது பங்கேற்றுப் பயன்பெறவேண்டும்!

# நல்லவராகவும் வெற்றியாளராகவும் வழி!

-யாழ்பாவாணன்-



-மாதகல்-

மூளை செயற்படும் ஒழுங்கு அல்லது மூளை இயங்கும் விதம் தான் உள்ளம் (மனம்) என்கிறோம். உணர்வு உள்ளம் (மேல் மனம்) - Conscious Mind துணை உணர்வு உள்ளம் (ஆழ்மனம்) -SubConscious Mind என இரண்டு வகையில் உள்ளம் பற்றிக் கதைப்பதுண்டு. இவ்விரு உள்ளங்களையும் (மனங்களையும்) முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பல வெற்றிகளை நம்மால் குவிக்க முடியும்.

உணர்வு உள்ளம் (மேல் மனம்) - Conscious Mind இல் தான் புலன் உறுப்புகளால் உள்வாங்கப்படும் தகவல் பேணப்படும். துணை உணர்வு உள்ளம் (ஆழ் மனம்) - Sub Conscious Mind இல் தான் அவை சேமிக்கப்படுகிறது. இவ்வாறு இவ்விரு உள்ளமும் (மனமும்) செயற்படுவதாகக் கருதுவோம். இதனடிப்படையில் எப்படிப் பல வெற்றிகளை நம்மால் குவிக்க முடியும்? மேல் மனத்தில் கவனமாக கையாளப்படும் தகவல் ஆழ் மனத்தில் பேணப்படுவதால், ஆழ் மனம் குறித்த வெற்றிகளைக் குவிக்க உதவுகின்றது. அதாவது ஆழ் மனத்தில் இருப்பவை தக்க சூழலில் நமது வெளிப்பாடாக அமைவதால் அவ்வெற்றிகள் கிட்டுகின்றன.

குறித்த சுழலில் ஒருவர் புலன் உறுப்புகளால் உள்வாங்கப்படும் தகவல் எதுவாயினும் மேல் மனத்தில் நல்ல நோக்கில் எணணிப் பார்த்தால் (சிந்தித்தால்), அவை ஆழ் மனத்தில் பதிந்தபடி அவரது நடத்தைகளில் நல்லெண்ண வெளிப்பாடாக மின்னும். அதனால் அந்த ஆளை சூழல் நல்லவராக அடையாளப்படுத்துகிறது. குறித்த சுழலில் ஒருவர் புலன் உறுப்புகளால் உள்வாங்கப்படும் தகவல் எதுவாயினும் மேல் மனத்தில் கெட்ட நோக்கில் எண்ணிப் பார்த்தால் (சிந்தித்தால்), அவை ஆழ் மனத்தில் பதிந்தபடி அவரது நடத்தைகளில் கெட்ட எண்ண வெளிப்பாடாக மின்னும். அதனால் அந்த ஆளைச் சூழல் கெட்டவராக அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு தான் சிலர் நல்லவரென்றும் சிலர் கெட்டவரென்றும் பலரால் எடை போடப்படுவதுண்டு.

நாம் மேல் மனத்தில் எதை எண்ணுகிறோமோ சிந்திக்கிறோமோ, அது ஆழ் மனத்தில் பதியும். ஆழ் மனத்தில் பதிந்தது நமது நடத்தைகளாக வெளிக்காட்டும். எனவே, புலன் உறுப்புகளால் உள்வாங்கப்படும் தகவல் எதுவாயினும் நல்ல நோக்கில் எண்ணிப் பார்த்து (சிந்தித்து) நாம் நற்பெயரை ஈட்ட முயற்சி செய்வோம். தவறாகக் கெட்ட எண்ணங்கள் மேல் மனத்தில் தோன்றினால் உடனடியாக நிறுத்தி, நல்லெண்ணங்களை எண்ணிப் பார்த்துக் (சிந்தித்துக்) கொள்ளவும். ஏனெனில், மேல் மனத்தில் கெட்டதைக் கழித்து நல்லதை உறிஞ்சினால் தான் நம்மை அறியாமலேயே நமது நடத்தைகளில் நல்லவை மின்னும். அதனால் தான் எந்த இடத்திலும் எவ்வேளையிலும் பலர் நற்பெயரை ஈட்டிக்கொள்கின்றனர்.

ஒரு நொடியில் கெட்டவரென்று பெயரெடுக்கலாம் நல்லவரென்று பெயரெடுக்க நெடுநாள் செல்லலாம்." என்பதை அடிக்கடி பலரும் எனக்கும் உங்களுக்கும் நினைவூட்டுவதைக் காண்பீர்கள். அந்த நல்லவரென்று பெயரெடுக்க மேலே சொன்னவாறு மேல் மனத்தில் நல்லதையே எண்ணிக்கொள்ள (சிந்திக்க) வேண்டும். நல்லவரென்று பெயரெடுத்தால் மட்டும் வாழமுடியாது் வாழ்வில் எல்லாவற்றிலும் வெற்றிகாண வேண்டும். அப்படியாயின் வெற்றிகாண என்ன செய்ய வேண்டும்? மேலுள்ள எடுத்துக்காட்டில் நல்லவர் என்று பெயரெடுத்தவர், சூழலில் நன்மதிப்பைத் பேணிக் கொள்கிறார். அந்த நன்மதிப்பு அவருக்கு முதலீடாகிறது. அதனால் அவர் மக்கள் உள்ளங்களை வென்றுவிடுகிறார்.

# கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

என்ன விசு அவசர அவசரமா வாறாய் ஏதும் வழியில்.......
வழியில தெருவில ஒழுங்கா போய் வர ஏலுமா எல்லாம் குறுக்கா மறுக்கா போகுதுகள் ஒழுங்கா நடக்கிதில்லை தில்லை அண்ணே. இதை யாரு சொல்லி கொடுக்கப்போகினம்

இடம் பெயர்ந்து மீழ்குடி ஏறி ஆறு ஏழு வருசமா அலஞ்சு ஒரு வீடு கட்டி குந்துவமெண்டா எத்தின கேள்வி யார் எவரிட்ட கேக்கிறதெண்டு தெரியேல்ல என்று சினந்தார் சோதி அண்ணர்.

வீட்டுக்கு வீடு வாசல்படிதான் இப்ப எங்க பிரச்சின இல்ல எல்லாருக்கும் சின்ன வேலை எண்டாலும் எங்கட சனமத்தானே து[illegible] தது எண்டு பாக்காம தங்கள கேட்டுத்தான் நடக்க வேண்டும் என்ட மமதயில இருக்கிற கதிரை நீண்ட நாட்கள் இருந்தால் இப்படித்தான் இருக்கும். தில்லை. எப்படி இருந்த நீங்க இப்படி அலையேக்க கவலைதான்.

இல்லை சோதி அண்ண பேப்பறில தான் உணவு மலிஞ்சிருக்கு. உரம் மலிஞசிருக்கு. மருந்து மலிஞ்சிருக்கு. வேலை குடுக்கப்போறம். காணிவிடப் போறம் கைதிகள விடப்போறம். 20 ஆயிரம் 50 ஆயிரம் வீடு வருகுது என்டவயளும் பொருத்து. வீடு பொருத்தாத வீடு எண்டு புழுகித்தள்ளியே அரசியல பேசிபேசியே காலத்த கடத்தினம் எண்டு இங்க இருக்கிறவயளுமெல்லோ துள்ளிக்குதிக்கினம். எங்கட நிலைகள் நோக்கள் புரியாம ...

வருகுது வருகுது வரும் ஆனா வராது எண்டு சொன்ன வள்ளியக்காவும் வாறா..... அவாவுக்குக் கிடைச்சிருக்கும் போல .....

ஏன் என்ர ஆத்திரத்த கிளறுறீயள் அதைக் கொண்டா இதைக் கொண்டா எண்டு உறுதி கொடுத்தன் தோம்பு கொடுத்தன் படங்கள் கொடுத்தன் சோலவரி குடுத்தன் கொட்டில போட்டன் இதுகளுக்கு அலஞ்சு கொப்பிகள் அடிச்சு இப்ப புள்ளிபோட்டாலும் தள்ளி வைக்கினம் எல்லாம் எங்கட ஆக்களின்ர பதவி பட்டங்களில் தொல்லையை சொல்லிமாளாது எங்கட தலையெழுத்துத் தான் விசு அண்ணே...

சும்மா சொல்லக் கூடாது பிள்ள ஆசாரி விடை கொடுத்தாலும் வழியில இருக்கிற பூசாரி விடை கொடுக்க மாட்டான் போல இதுதான் எங்கட தமிழற்ற வேலை இதுக்கு ஒரு சுனாமி வந்து எல்லாற்ற கதிரயல மாத்தி விட்டாலாவது ஏதும் நடக்கும் என்டா அதுக்குள்ள எத்தின தலையீடுகள் வரும் எதைக் காட்டியும் இருப்பை விடமாட்டினம் யாரு மக்களின்ற அலச்சலப் புரியப்போகினம்? கொஞ்சக் காசும் கரைஞ்சு அலைஞ்சு திரியிறம் அவையல் ஏப்பம் விட்டு ஏதேதோ சொல்லினம்.

பரமசிவன் களுத்தில் இருக்கிற பாம்புகள் இப்படித் தான் ஆடும் நீ எடுத்த முயற்சியை கைவிட்டிடாத வள்ளியக்கா இதுக்குள்ள செல்வாக்கா இருக்கிறவயள் கொத்தி சாய்ப்பினம். ஓ.....

இது மட்டுமா எங்கட நாட்டல நடக்குது கதிரைகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்டது போலத்தான் பிள்ளையலின்ற படிப்புகளும் நடக்குது. பாடசாலையலில படிப்பிக்காதவயள் ரீயூசனில போய் கத்திக் கத்தி படிப்பிக்கினம் இப்ப இது யாருக்குத் தொரியாது சொல்லு பாப்பம் என சோதி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

ஓம் ஓம் எங்கட ஊரில மூன்று மாணவர் கொலசிப்பில் பாஸ் பண்ணினா அதுக்கு உரிம கோரிறது எத்தின பேர் சொல்லு பாப்பம் சோதி. கல்வி வலயம் அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள், பள்ளிநிர்வாகம்,ரீயூசன் சென்ரர் அரசியல்வாதிகள் எல்லாரும் எங்கட எண்டு உரிமை கோரி தமக்குத் தாமே மாலை தேடி அலையிறவையள் அந்த மூன்டுபேராட படிச்சு தோத்தத 30 மாணவர்களின் தோல்விக்கும் இவையள் பொறுப்பு ஏற்பார்களா? யாராவது முன்வரட்டும் பாப்பம் என சவால்விட்டார் தில்லை.

இத்தனை கோவம் ஏன் தில்லைக்கு ஏதோ விஷயம் இருக்கு எண்டார் சோதி இது என்ன புதுசு ஒரு கல்விப் புல முக்கிய புள்ளி பலதுக்கும் பொறுப்பானவர் பேசினதைக் கேட்டா இரண்டு லட்சம் மாணவர்களிற்கு பதினையாயிரம் ஆசிரியர்களாம். ஒரு ஆசிரியருக்கு பதினான்கு மாணவர்தானாம் ஒரு ஆசிரியர் 14 மாணவரை முறையாகப் படிப்பிச்சா எங்க ஊரில எத்தின திறமசாலியள் வெளிவருவினம் தொரியுமே விசு

ஏன் எங்கட ஊரிலயும் சாதன படைக்கினம் தானே இது தெரியாதோ தில்லைக்கு. சாதனை படைக்க ஒரு சில ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்,அக்கறையும் காரணம் அதையே தூங்கிக் கிடக்கிறவயளும் உரிமை கோரி சாதனை படைத்த மாணவர்களை கூட மறைக்கப்பாக்கிறது தான் விசித்திரமாய் இருக்கு.

தூங்கிக் கிடக்கிற ஆசிரியர்களால நல்லாசான்களும் எல்லே பழியை சுமக்குதுகள். சில பாடசாலையலில 5, 6 படிக்கின்ற மாணவர்கள் கூட எழுத, வாசிக்க, கையெழுத்துப் போட தெரியாது ஏத்தி விடுவினம். அதிகாரிகள் மாணவ மரியாதைக்கு அலையினமே தவிர இதைப்பற்றி அக்கறயில்லப் பாரு சோதி....

எங்கட ஊரில 1010 பாடசாலை இயங்குதாம் 70 பாடசாலை கட்டுப்பாட்டிலயும் மாணவர்கள் இல்லாமலுமலும் முடக்கிக் கிடக்குதாம் இந்தக் கணக்கு தெரிஞ்சவனுக்கு படிக்க வாற மாணவர்கள் எழுத வாசிக் தெரியாம இருக்கிறவயலுக்கு மெல்லக் கற்கிற மாணவர் என்ற பட்டமழித்து அவயளுக்கு பின்னூட்டல் வகுப்பு மாலையில நடாத்தி நிதி பொறும் திட்டத்தில அக்கற அதிகமாம். ஏன் மெல்லக் கற்கும் மாணவர்கள் போல மெல்லக் கற்பிக்கும் ஆசிரியர்களை இனங்கண்டு ஏதேனும் திணைக்களத்திற்கு மாத்திற திட்டம் இருந்தா அது கூட எங்கட மாணவ சமுதாயத்தை காப்பாற்றுமல்லோ எண்டு கோபத்துடன் தில்லை கேட்டார்.

விசு வாத்திக்கு விசம் ஏறின மாதிரி பொரியத் தொடங்கினார். இந்த வருசம் நல்ல முடிவுகள் வந்தத அறியாம பேசுறீர். ஒரு சிலருக்காக எல்லாரயும் குறை சொல்லக் கூடாது. நேரம் காலம் பாராம படிப்பிக்கிறதோட வீட்டு சுமையை மறந்து மாணவர்களுக்காக படுகிற பாட உணராம இப்படி சொல்லப்பிடாது. என்ற தொனி ஒரு கனம் அச் சூழலையே மௌனிக்க வைத்தது.

இல்லை விசு வாத்தியார் எங்கட ஊரில மாணவர்களுக்குப் படிப்பிக்க ஆசிரியர்கள் போதாது.இப்ப நான் வெளியில நாலு அலுவலுக்கு திரியிறதல தான் தெரியுது. தொகை தொகையா பெரிய பள்ளிக்கு மாணவர்களும் ஆசிரியர்கும் நகரத்தில போய் படிக்கிறது, படிப்பிக்கிறது நாகரீகமாக நினைச்சு போகினம் நீங்க சொன்ன ஒரு ஆசிரியருக்கு 14 ஆசிரியர்கள் உருவாக்கிறது பெரிய கஷ்ரமில்ல இதைக் கவணிக்கிறவயள் கவணியாமல் இருக்கிறது தான் எண்டு நினைக்கிறன் என்றார். வீட்டுக்கு அலையும் வள்ளியக்காவின் கொதிப்பு தன் பிள்ளைகள் படிக்க பேகாததை வெளிப்படுத்தியது.

வள்ளியின் ஆதங்கம் புரிகிறது. நகரத்தில தோவைக்கு அதிகமாகவே பாடநேரமில்லாமலே பல ஆசிரியர்கள் குவிந்திருக்க கிராமங்கள் பின்தங்கிய பகுதிகளுக்கு ஆசிரியர் வளம் போதாதிருப்பதற்கு அரசியல்வாதிகள், அதிகாரிகள் செல்வாக்கு, பின்புற கவணிப்புகளால் சுத்திச் சுத்திசுப்பற்ற கொல்லைக்குள்ள கற்பிக்குற கல்விப்புல நிர்வாகம் கூட சொல்வாக்குக்கு துனை போறதுதான் மாணவர் பின்னடைவிற்கு முக்கிய காரணம். விசு வாத்தி சொல்லிற முடிச்சை அவுக்கிறது யார்? இப்பிடி பல முடிச்சுகள் உண்டு.

# கிழக்கு அரியாலை வளம் பெறுமா?



நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிழக்கு அரியாலை, பூம்புகார், நாவலடிப் பகுதிகள் யுத்த காலத்தின் பின்னர் கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது!
பூம்புகார் சந்தியில் இருந்து கிழக்கரியாலை வரையான வீதி குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

மழைகாலத்தில் வீதிகளில் குளமாக தண்ணீர் தேங்கி நிற்கும் அளவிற்கு குண்டும் குழியமாகக் காணப் படுகின்றன. ஆதோடு வறட்சியான காலத்தில் குடிதண்ணீருக்கான பற்றாக்குறையும் நிலவுகின்றது. பெரும் போக நெற் செய்கையிலும் பனம் பொருட்களான கருக்கு மட்டை, ஓடியல், பனாட்டு உற்பத்தி செய்யக் கூடிய பிரதேச மாகும்.

கடந்த காலத்தில் யுத்தம் நடந்த பொழுதும் அதற்கு முன்னரும் விடுதலைப் புலிகளின் இராணுவ பயிற்சி முகாமாக மேற்படி மணல் பிரதேசம் அமைக்கப்பட்டிருந்தது. மண் மீட்புக்கான போராட்டம் மௌனித்தும் தற்போது மணல்கொள்கைகள் தாராளமாக நடைபெறுகிறது என்று கவலை தெரிவித்தார் கனகரத்தினம் குணசேகரம் பிள்ளை (வயது 69)
அரச உதவிகளாக வீட்டுத்திட்டம், கிணறுகள் அமைத்தல் போன்றவை இப்பகுதி மக்களுக்கு கிடைத்திருந்தாலும் சிலருக்கு எட்டாக் கனியாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

விவசாயத்தை நம்பி வாழும் இந்தப் பிரதேசம் கால் நடை வளர்ப்பிற்கும் பிரசித்தி பெற்றதாகும். தற்போது இந்த நிலைமாறி வருகின்றது. அரசியல் பிரமுகர்கள் உசாராக இது விடயமாக கதைப்பதில்லை என்றும் க. குலசேகரம் பிள்ளை தெரிவித்தார்.
கிழக்கு அரியாலையில் வசிக்கும் மக்களிற்கு வயல் நிலம் இல்லை குடிறேற்றத்திட்டங்களில் இருப்பவர்கள் பலர் வசித்து வருகின்றபோதும் வயல் காணிகள், மேட்டுக்காணிகளின் உரிமையாளர்கள் வேறு பிரதேசங்களில் இருக்கின்றனர். சிலர் புலம் பெயர் நாடுகளில் வசிக்கின்றனர். முப்பது ஆயிரம் தொடக்கம் ஒருலட்சம் வரை ஒரு பரப்புக்காணி விற்கப்படுகின்றது.
பிரதான வீதிகள் திருத்தப்பட்டால் .........! நிலங்களுக்கு பெறுமதி அதிகரிக்கலாம் ஏன் இந்தத் தாமதம்? ............. போக்குவரத்து வசதிகளும் குறைவாகவே உள்ளது. ஒரே ஒரு பஸ் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நீதிபதி இளஞ்செழியனைப் போல வரவே சட்டத்துறையை தேர்வு செய்தேன்

## 9A பெற்ற மாணவி செல்வி குயின்ரன் நிருஜா



கொழும்புத் துறை செபமாலை அன்னை ஆலய பகுதியைச் சேர்ந்த குயின்ரன் நிருஜா, வேம்படி மகளிர் கல்லூரி மாணவி கல்விப் பொதுதராதரப் பரீட்சையில் 9Aசித்தி பெற்றுள்ளமையை யாழ் இராகஸ்வரம் கலை மன்றம் பாராட்டியுள்ளது.
டிமல்:– உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?
நிருஜா :– ஏழை மக்களிற்கு இலவச சட்ட உதவிகள் செய்ய நான் சட்டத்துறையில் பயில விரும்புகின்றேன். 2012ம் ஆண்டு பாடசாலை நிகழ்வொன்றில் நீதிபதி இளஞ்செழியன் அவர்களது பிரதம விருந்தினர் உரையைக்கேட்டேன். அப்போதுதான் எனக்கு இந்த எண்ணம் வந்தது நிறைய அநியாயங்கள் நடக்கின்றது. அதை இல்லாமல் செய்யவே நீதிபதி அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்ற எண்ணமே சித்தியடைய வைத்துள்ளது! மேலும் நான் சாதித்துக் காட்டுவேன். பெற்றோரின் ஊக்கப்படுத்தல் தான் எனக்கு மேலும் உறுதுணையாகவிருந்தது. பிரத்தியேகமாக அரியாலை சயன்ஸ் அக்கடமியில் கல்வி பயின்றேன். வீட்டில் நிரோசன் ஆசிரியர் விஞ்ஞானமும் பரணிதரன் அசிரியர் கணிதமும் சொல்லித்தந்தார்கள். இவற்றை எல்லாம் ஒழுங்கு படுத்திய எனது அப்பாவிற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் என்றார்.
கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய பங்கைச் சேர்ந்த புனித பத்திரிசியார் ·கல்லூரி மாணவர்களான றொபேட் சாருஜன் 5A,2B,C,S,ஜெயசிங்கரட்ணம் தர்யுகன் B,3C,5S ஜெயசிங்கம் தர்ஜிகன் 2B, 2C, 5S,யாழ் மத்திய கல்லூரி மாணவர்களான வில்வராசா வினோஜன் B,3C,2S,மரியதாஸ் மரிய நிக்சன் 2A,5B,2C, ஜெகதாஸ்துசாந் A,2B,5C,S,திருக்குடும்ப கன்னியர் மடம் மாணவி பிரபாகரன் சானுஜா B,2C,4S,வேம்படி மகளிர் கல்லூரி மாணவி குயின்ரன் நிருஜா 9A ஆகியோரை யாழ் களரியும் வாழ்த்துகின்றது.

டிமெல்

# வாழ்க்கையை மாற்ற வல்ல மகத்தான 12 கர்ம விதிகள்

**01) காரணி மற்றும் விளைவு விதி** "Law of Cause and Effect"
"எதை விதைக்கிறாயோ அதையே அறுக்கிறாய்" நம்முடைய எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் விளைவுகள்உள்ளன. அவை நல்லவையாக இருந்தாலும் சரி கெட்டவையாக இருந்தாலும் சரி அமைதி, அன்பு, நல்லிணக்கம், வளமை ஆகியவற்றை விரும்பினால் அவையே நமக்கு கிடைக்கும் இந்த உலகில் நாம் இடும் ஆற்றலுக்கு (எண்ணமும், செயலும்) உடனடியாகவே அல்லது காலம் கழித்தோ கட்டாயம் விளைவு உண்டு.

**02) படைத்தல் விதி** "Law of Creation"
வாழ்க்கையில் எதுவுமே அதுவாக நடப்பதில்லை, நாம் அதை நடக்க வைக்க வேண்டும். நாம் எதை விரும்புகிறோமோ அவை எம்முடைய ,பங்களிப்பு மூலமாக நமக்கு வருகிறது. நம்மை சுற்றியுள்ள அனைத்துமே யாரோ ஒருவரின் எண்ணத்தில் உதித்தது தான் நாமும் இந்த பிரபஞ்ச சக்தியோடு ஒன்றிணைந்து இருப்பதால் படைப்பின் பரிணாம வளர்ச்சியில் நம்முடைய நோக்கங்களும் இருக்கிறது. ஆகவே நமக்கும் நம்மை சுற்றியுள்ள சமூகத்தின் விருப்பத்திற்கும் உகந்ததாக நம்முடைய படைப்பு இருக்குமாறு பார்த்துக் கொள்வது நமது பொறுப்பாகும்.

**03) பணிவு விதி** "Law of Humility"
மிகப்பெரிய மாற்றங்கள் வருவதை நாம் மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ளும் தன்மை என்பது பிரபஞ்ச கோட்பாடாகும். இது எல்லா அமைப்புக்களிலும் உள்ள விதி. பெரிய மாற்றங்களை வேண்டினால் நிகழ்கால சூழ்நிலைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் எதிர்மறையான விஷயங்களை மாற்ற எதிர் மறையான போக்குகளை கடைப்பிடித்தால் கடைசியில் அதன்விடை பூஜ்யமாகத்தான் இருக்கும்.

**04) வளர்ச்சி விதி** "law of Growth"
நமது சுய வளர்ச்சியில் எப்போழுதும் எந்த சூழ்நிலையிலும் நம்கையில் தான் உள்ளது. நாம் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஒரே நபர் நாம் தான். நாம் மாறும் பொழுது நமது வாழ்க்கையும் அதற்கு ஒன்றாற்போல் நம்முடன் சேர்ந்து மாறுகிறது. உண்மையான வளர்ச்சி அல்லது மாற்றம் நாம் எப்பொழுதும் முழுமனதோடு அர்ப்பணித்து மாறுகிறோமோ அப்பொழுதுதான் இருக்கிறது.

**05) பொறுப்பு விதி** "law of Responsibility"
நமது வாழ்க்கையில் நடக்கும் அனைத்து விஷயங்களுக்கும் நாம் பொறுப்பேற்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை நாம் செய்வதில்தான் உள்ளதே தவிர வேறெதினாலும் கிடையாது. வாழ்க்கையில் ஒருவருக்கு ஒரு தடுமாற்றம் வரும் பொழுது மனதில் நிறைய தடுமாற்றங்கள் வருகின்றன. அதை மாற்றவேண்டுமென்றால் நமது எண்ணாங்களை மாற்றி பிறகு நம்மைச் சுற்றியுள்ளவற்றை மாற்ற வேண்டும்.

**06) தொடர் விதி** "law of Connection"
இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை பெரியதாக இருந்தாலும் சரி, சின்ன தாக இருந்தாலும் சரி நமது கடந்த காலம் நிகழ்காலம் எதிர்கா லம் எல்லாமே ஒன்றுக் கொன்று தொடர்புடையவை. இதை பயன்படுத்தி நாம் விரும்பும் மாற்றத்திற்கு வழி செய்ய வேண் டும்.

**07) கவன விதி** "law of Focus"
ஒருவரால் ஒரே நேரத்தில் பல பணிகளில் கவனத்தை செலுத்த முடியாது. ஒரே நேரத்தில் இரண்டு விசயங்களை சிந்திக்க முடியாது. நமது ஆன்மீக வளர்ச்சியை எடுத்துக் கொண்டால் ஒரே நேரத்தில் எதிர் மறை சிந்தனை மற்றும் செயல்களைக் கொண்டு அதனை அடைய முடியாது. நமது முழு கவனத்தையும் ஒரே பாணியில் இருத்தி அதனை அடைய வேண்டும்.

**08) விருந்தோம்பல் மற்றும் கொடுத்தல் விதி** "law of hospitality and giving"
நம்முடைய பழக்க வழக்கங்கள் நமது எண்ணாங்களை மற்றும் செயல்களோடு ஒத்துப் போக வேண்டும். நமது சுயநலமற்ற தன்மையை செயல் விளக்கம் அளிப்பதே நமது உள்நோக்கமாக இருக்க வேண்டும். சுயநலமின்மை என்ற கோட்பாடு ஏதாவது நமக்கில்லாமல் இந்த சமுதாயத்திற்கு செய்யும் பொழுதுதான் தெரியும் அதுவே மிகப்பெரிய சந்தோசம். ஒரு சுயநலமின்மையால் ஆன்மீக வளர்ச்சி என்பது இல்லை

**09) மாற்றம் விதி** "law of Change"
மாற்றம் இல்லாவிட்டால் அதே வரலாறு திரும்ப வரும். மாற்றத்திற்கான மனப்பூர்வமான அர்ப்பணிப்பு மட் டுமே கடந்த கால்தை மாற்ற வல்ல ஒரே வழி. நேர்மறையான அழுத்தங்களும் மாற்றங்களும் இல்லையென்றால் வரலாறு மாறாது. மாற்றம் ஒன்றே மாறாதது.

**10) இங்கே இப்பொழுதே விதி** "law of now and here"
நாம் அனைவரிடமும் இருப்பது நிகழ்காலம் மட்டுமே வருத்தத்துடன் கடந்த காலத்தைப் பார்ப்பதும் பயத்துடன் எதிர் காலத்தைப்பார்ப்பதும் நிகழ்காலத்தைபயத்துடன் கொள்ளை யடிததும்விடும் பழைய முறைமை சிந்தனைகளும் நடத்தை முறைகளும் நிகழ்காலத்தை அழித்து மாற்றங்களை வரவிடாது. இப்போதே இந்த சமயத்தில் கிடைக்கும் வாய் ப்பை பயன்படுத்த வேண்டும்.

**11) பொறுமை மற்றும் வெகுமதி விதி** "law of Patience and Rewards"
பொறுமையான மனநிலை இல்லாமல் எந்த ஒரு மகத்தான காரியத்தையும் அடைய முடியாது. பொறுமையும் விடாமுயற்சியும் எந்த வொரு வெற்றிக்கும் வழிவகுக்கும் வெகுமதிகள் மட்டுமே விடையின் கடைசி அல்ல. சத்தியம் நீடித்த சந்தோசம் மற்றும் உற்சாகம் அனைத்துமே எதை சரியாக இந்த உலகம் மற்றும் நமது சந்தோசத்திற்காக செய்யவேண்டும் என்பதை அறிந்து செய்வதில்தான் இருக்கிறது.

**12) முக்கியத்துவம் மற்றும் அகத்தூண்டுதல் விதி** "Law of Signifigance and Inspiration"
நாம் அறிந்த ஆற்றல் மற்றும் முயற்சியின் இறுதிவடிவம் தான் நமக்கு கிடைக்கும் வெற்றி. ஆகவே முழுமனது மற்றும் அகத்தூண்டுதலுடன் சுயநலமில்லாமல் நாம் செய்யும் அனைத்துமே மிக முக்கியத்துவம் மிக்கவை. அவை காலத்தாலும் மறக்காத காரியமாக இருக்கும். எனவே இந்த 12 கர்ம விதிகளையும் நாம் பின்பற்றும் போது எம் வாழ்வு செழிப்புள்ளதாகும்.

இ.ராஜன்

# இலங்கை அரச புகைப்பட விழா



அரச அனுசரணையுடன் உயர்தரமான ஆக்க பூர்வமான புகைப்படக்கலையினை உருவாக்கல் மற்றும் புகைப்பட இரசனையுடைய சந்ததியினரை உருவாக்கும் நோக்கில் பின்வரும் தலைப்பிலான 5 பிரிவுகளாக புகைப்படப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது. 1.மனித செயற்பாடுகளால் சூழல் பாதிப்பு, 2.வாழ்க்கை முறைகள் கலாசார அம்சங்கள் 3.இயற்கை வன வாழ்வு மற்றும் நிலக் காட்சிகள் , 4.செய்தி மற்றும் விளையாட்டு, 5.திறந்த பிரிவு புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018 மே –15 ஆகும்.
**முதலாமிடம் - தங்க விருது சான்றிதழ் மற்றும் 30.000**
**இரண்டாமிடம் - வெள்ளிவிருது சான்றிதழ் மற்றும் 20.000**
**மூன்றாமிடம் - வெண்கலவிருது சான்றிதழ் மற்றும் 15.000**
இது தவிர ஒரு பிரிவில் 10 திறமைச்சான்றிதழ் வழங்கப்படும் என கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்கள்
**அரச புகைப்பட மேம்பாட்டுப் பிரிவு**
011 43 27 597

கட்டுரை

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 2

பரமபுத்திரன்

## தமிழரின் புலம்பெயர்வும் சிங்களம் பெற்ற நன்மைகளும்

தமிழர்கள் என்று தங்களது அரசியல் எதிர்காலத்தை தாங்களே தீர்மானிக்கும் நிலைக்கு வருகிறார்களோ அன்று தான் அவர்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்ற எண்ணம் அல்லது முடிவு அவசரத்திலோ அல்லது எழுந்தமானமாகவோ எடுக்கப்பட்டமுடிவல்ல. இது அனுபவ வாயிலாக எடுக்கப்பட்ட முடிவு. அந்நியர் வருகையின் முன்பு இன்றைய சிறீலங்கா என்ற நாடு மூன்று வேறுபட்ட, இராச்சியங்களாக இருந்திருக்கிறது. இந்தமூன்று இராச்சியங்களும் நிர்வாக தொழிற்பாடுகளின் இலகுவாக்கலுக்காக ஒரேஅரசமைப்புக்குள் கொண்டு வரப்பட்டது. அதன்பின் அரச இயந்திரத்துள் பிரவேசிக்க சுதேசிகளுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வேளைகளில் சிங்களவரை பொறுத்தவரை தங்கள் இருப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவே உறுதி கொண்டார்களே தவிர இலங்கையில் வாழும் அனைவரும் ஒரேமக்கள் என்று நினைக்கவே இல்லை. இதற்கு அன்றைய சிங்கள முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட முறுகல்களும், சிங்கள தமிழ் மக்களிடையே காணப்பட்ட முறுகல்களும் ஆதாரமாகவே உள்ளது.

இந்த சிங்கள தமிழ் மக்களிடையேயான முறுகலுக்கு சிங்களவரை முற்று முழுதாக எதிர்க்கவோ குறைகூறவோ முடியாது. காரணம் சிங்கள அரசில் வெறுப்புற்ற சிங்களவர்களும் உள்ளார்கள். சிங்களவர்களும் நாட்டைவிட்டு புறப்பட்டும் உள்ளார்கள். எல்லா சிங்களவரும் தமிழரை வெறுப்பவர்கள் அல்ல. ஆனாலும் கூர்ந்து அவதானித்தால் தமிழர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்த சிங்கள அரசியல்வாதிகளை தமிழர்களும் ஆதரிக்கவில்லை, அதே வேளை சிங்களவர்களும் புறக்கணித்தார்கள். இதனால் சில சிங்கள தலைவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கும் சூழலும் ஏற்பட்டது. அதே சமயம் சிலர் தங்கள் இருக்கையை நிலைப்படுத்துவதற்காக இன வாத அரசியலில் இணைந்து கொண்டனர். சிங்களவரில் இருந்த, இருக்கின்ற ஒரு முக்கிய திறமை தமிழ் மக்களிடம் இருப்பதில்லை. அதாவது எங்கு கூட்டு வைத்தும் தங்கள் காரியத்தை சாதிப்பார்கள். இது இன்றல்ல மன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. அது நல்லதோர் .இயல்பு என்று சொல்ல முடியாது. இருந்தாலும் சிறீலங்கா என்ற நாடு எங்களுடையது, அது ஒரு சிங்கள பௌத்த நாடு, நாங்கள் பெரும்பான்மையினர், நாங்கள்தான் ஆட்சிக்குரியவர்கள் என்று சாதித்து விட்டார்கள். தமிழர்கள் தங்களால் ஆளப்பட வேண்டியவர்கள் என்ற மனநிலையை சிங்கள மக்களிடம் வளர்த்துக்கொண்டார்கள். இந்த அடிப்படையில் தான் சிறிலங்காவில் தற்காலிக சனாதிபதியாக இருந்த டீ. பீ. விஜயதுங்க என்பவர் பெரும்பான்மையினர் மரங்கள் போன்றவர்கள் இங்கு வாழும் சிறுபான்மையினர் அதில் படரும் கொடிகள் போன்றவர்கள் என்று கூறினார். அதாவது பெரும்பான்மையினரை நம்பி சிறுபான்மையினர் வாழலாமே தவிர அவர்கள் தங்களுக்கு ஒரு அதிகாரத்தை எதிர்பார்க்கக் கூடாது. பெரும்பான்மையினர் தருவதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர மேலதிகமாக எதையும் கேட்கக்கூடாது. அடங்கிப் போகவேண்டுமே தவிர ஆளும் எண்ணம் வரவே கூடாது என்பது அவரின் கருத்து. இக்கருத்தினை அவரின் தனிப்பட்ட கருத்தாக கொள்ளமுடியாது. பொதுவான சிங்கள அரசியல்வாதிகளின்கருத்து.

தமிழ் மக்களின் தலைவர்கள் தங்கள் சமூகம் தொடர்பாக எப்படி சிந்திக்கிறார்கள் என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. இஸ்லாம் சமயத்தை பின்பற்றும் மக்கள் தாங்கள்: மதத்தின் அடிப்படையில் முஸ்லீம்கள் என்றே கூறுவார்கள். அதேபோல சிறீலங்காவில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் தாங்கள் தமிழ்மொழியை பேசினாலும் முஸ்லீம் என்ற வகுதிக்குள் தம்மை அடக்கிக் கொள்வர். இதனால் தாங்கள் தனியான பிரிவாக உருவாகிக் கொள்வர். முஸ்லீம்களின் தலைவர்களும் எப்போதும் தமிழர்களில் இருந்து வேறுபட்ட ஒரு நிலை யில் முஸ்லீம்களை வைத்திருப்பர். தமிழ்பேசும் முஸ்லீம்களுக்கும்,தமிழர்களுக்கும் இடையே எப்போதும் சிறியதொரு முறுகல்நிலை இழையோடிக் கொண்டிருக்கும். சைவ சமயத்தினரும், கிறித்தவ மதத்தினரும் மத அடிப்படையில் தங்களை வேறுபடுத்தாமல் மொழி வாரியாகவே இணைவர். இருப்பினும் தமிழ் மக்கள் தலைவர்கள் தங்களின் சொந்த நலன் சார்ந்தே எந்த முடிவையும் எடுப்பார்கள் என்றே சொல்லமுடியும். ஒரு சமூகம் என்னை நம்பி தங்கள் எதிர்காலத்தை ஒப்படைத்துள்ளார்கள். நான் அவர்களுக்காக உண்மையான சேவை செய்யவேண்டும் என்று எத்தனை தலைவர்கள் செயற்பட்டார்கள் என்று கோடிட்டு காட்டமுடியாது. தவிர, எங்களுக்குள் உட்பூசல் ஏற்படுத்தி சண்டையிட்டுக் கொள்வர். ஆனால் ஒவ்வொரு தலைவர்களும் தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்துவார்கள், தங்களுக்கான உரிமைகளை பெற்றுத்தர பாடுபடுவார்கள்,எங்கள் உரிமைகளை வென்றெடுப்பார்கள் என்று முற்று முழுதாக தமிழர்கள் நம்புவர். அதில் எத்தனைவீதம் நிறைவேறியுள்ளது என்று கூறமுடியாது. காரணம் தமிழர்கள் இன்னும் தொடக்கநிலையிலேயே வாழ்கிறார்கள். இதற்குமேல் கருத்துருவாக்கம் என்ற அடிப்படையில் நோக்கின் வலுவான பேச்சாற்றல் உள்ளவர்கள் இலகுவாக தங்களை திறமையானவர்கள் என்று காட்டிவிடுகிறார்கள். ஆனால் செயற்பாட்டில் எந்தளவுக்கு ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது கடந்தகால விளைவுகளின் அடிப்படையில் சிந்திக்க வேண்டிய ஒன்று. பொதுவாகவே செயல்வீரர்கள் அதிகம் பேசுவதில்லை. காரணம் எதையும் சாதித்துக் காட்டவே அவர்கள் விரும்புவார்கள். ஆனால் சாதனை வீரர்களை நாம் நம்புவது குறைவு, ஏனென்றால் பேச்சுவன்மை அவர்களுக்கு குறைவு. அவர்கள்பேசுவதும் குறைவு. இந்த கவனமின்றிய போக்கு அநேக இடங்களில் எம்மை தோற்க வைக்கிறது. அதனால் நாம் தோற்று விடுகிறோம். இதை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதே மிகப்பெரிய சோகம்.

உண்மையிலும்பார்க்க போலிகளையே நாம் பெரிதாக நம்புவோம். அவர்கள் எங்களை நம்ப வைப்பார்கள். இதற்கு ஒரு சிறப்பான உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அப்போது நான் தமிழ் ஈழம் என்று எல்லைப் படுத்தப்பட்ட பிரதேசத்துள் வாழ்ந்தேன். தமிழ் திரைப்படங்களும்காண்பிக்க அனுமதி வழங்கப் பட்ட காலம் அது. தமிழ்திரைப்படங்கள் மிகவும் கவனமாக பார்க்கப்பட்டு, தேவையற்ற காட்சிகள் நீக்கப்பட்டு, முகம் சுளிக்க வைக்கும் காட்சிகள் தவிர்க்கப்பட்டு, சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரும் ஒன்றாக இருந்து அனுபவிக்க கூடியதாகவே திரைப்படங்கள் காண்பிக்கப்படும். நானும் எனது சில நண்பர்களும் படம் பார்க்க சென்றிருந்தோம். அது ஒரு திரையரங்கு. நிறைந்த மக்கள் கூட்டம். நின்ற நிலையில் படம் பார்த்தோம். அப்படத்தில் துப்பாக்கி சண்டைகள் காட்டப்பட்டன. தனி ஒருவர் நின்று எல்லா எதிரிகளையும் சுட்டு வீழ்த்தி, வெற்றியுடன் எந்த ஒரு காயமும் இன்றி தப்பி வருவார். படம் முடிந்து வீட்டுக்கு வரும்போது எங்கள் மீதே எங்களுக்கு கோபம் வந்தது. எங்களை நாங்களே பேசி வெறுப்பை தீர்த்து கொண்டோம். எவ்வளவு மோசமான ஏமாற்று. உண்மை நிலையை சிந்திக்க கற்றுக்கொண்டேன். இன்னும் சொல்லப் போனால் உண்மைக்கும் பொய்மைக்குமான வேறுபாட்டை கண்டு பிடிக்கும் ஆற்றல் எங்களுக்கு இருக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்று யோசிப்பீர்கள். உண்மையில் எங்கள் தமிழ் தாயின் பிள்ளைகள் எவ்வளவு துன்பத்தின் மத்தியில், தங்கள் உயிரை துச்சமாக மதித்து, போர்க்களங்களில் சமராடி, உயிர்க் கொடை செய்யும் நாட்டில், எப்படி இந்தக் காட்சிகளை ஏற்றுக்கொள்வது. எனவே போலிகளை நம்பும் அளவிற்கு உண்மைகளை நாம் நம்புவதில்லை. அதுவே எங்களை தோல்வியின் பக்கம் இழுத்துச் செல்கிறது.

மேற்சொன்ன சம்பவம் ஒரு உதாரணம். இதை வைத்துக் கொண்டு"நீ அவங்கட ஆளா" என்றெல்லாம் முடிவெடுக்க வேண்டாம். எப்போதும் நடுநிலையில் நின்று முடிவெடுக்க வேண்டும். நடுநிலையில் நின்று முடிவெடுக்கும் நல்ல இயல்பு எம்மிடம் மிக அரிது. இதை கண்டு பிடித்த சிங்கள அரசு தனக்கு சாதகமாக, அல்லது பணிந்து போகாத எவரையும் புலி என்று பச்சை குத்தும் வேலையை செய்தது. எனவே நாங்கள்தமிழனின் நன்மை கருதி புலி என்ற வரையறைக்கு வெளியே வந்து தமிழர் வாழ்வு என்ற பெருநோக்கில் நடுநிலையில் சிந்திப்போம்.

**இந்த செய்திகளுக்கும் தமிழ் மக்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் என்ன தொடர்பு என்று பார்ப்போமா? தமிழனின் போராட்டம் நலிவடைய வேண்டுமெனின் தமிழரின் எண்ணிக்கை குறையவேண்டும். வெளிநாட்டுக் குடிப்பெயர்வு வெற்றிகரமாக இதனை நிறைவேற்றியது. அதாவது போராடும் வலுக்கொண்ட இளைஞர்கள் நாடுவிட்டு சென்றனர். போராட்ட வலுக் குறைப்பை சுலபமாக செய்யும் வழிமுறை என்பதாலேயே அரசு எந்த தடங்கலும் இன்றி தமிழ் இளைஞர்கள் வெளிநாடு செல்ல அனுமதித்தது. இவர்களின் குடிபெயர்வை தொடர்ந்து அவர்களைமணம்முடிக்க தமிழ்ப்பெண்கள் போயினர். அதனுடன் அப்பா. அம்மா போயினர். தமிழ் ஆட்கள் குறைந்தனர். வெளிநாட்டுப்பணம் இலங்கைக்கு வந்தது. இதுவும் பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பானது. வெளிநாட்டு பணவரவு ஆசையை தூண்ட மேலும் மேலும் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குடி பெயர்ந்தனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பணமீட்டும் வசதிகள் குறைவு. எனவே நிறைந்த பணமீட்டும் சிறந்த வழியாக வெளிநாடு அமைய ஈழத்தில் போராடும் வலுவுள்ள தமிழர்கள் குறைந்தனர். போராட்ட வலுவும் குறைந்தது.மக்கள் எண்ணிக்கையும் குறைந்தது. இதைவிட இன்னுமொரு செய்தி இன முரண்பாடு. அதனால் ஏற்பட்ட உயிர்க்கொலை. கடத்தல் காணாமல் போதலால் நாட்டை விட்டுப்போகும் மக்கள் நாட்டை மறக்கின்றனர். தங்கள் புதிய வாழ்வு பற்றி சிந்திப்பாரே தவிர. விடுதலை எண்ணம் மறக்கப்பட்டு போகின்றது. அதேவேளை அவர்கள் போராடவும் தவறவில்லை. அது ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நடக்கும். பின் பழையபடி தங்கள் வேலைகளை ஆரம்பிப்பார்கள் என்ற கருத்துக்கணிப்பும்வெளியில் வந்தது. எனவே வெளிநாட்டு இடப்பெயர்வு அரசிற்கு நன்மையே தந்தது.**

இதற்கும் மேலாக தமிழ் மக்கள் கொழும்பு நோக்கி படைஎடுத்து அங்கேயே வாழ ஆரம்பித்தனர். இதனால் அங்கும்பணப்புழக்கம் அதிகமாகியது. சிங்கள மக்களுக்கும் தமிழர்கள் பணம் காய்க்கும் மரங்களாக தெரிந்தனர். வியாபாரம் பெருகியது. வீட்டு வாடகை உயர்ந்தது. வேலைதேடும் இளைஞர் தொகை குறைந்தது. வீடுகளும் விலையேறின. இவை எல்லாம் அரசிற்கு சாதகமாகியது. இந்த அடிப்படைதான் தமிழர்களின் பாதுகாப்பு பிரதேசமாக கொழும்பை நினைக்க வைத்தது. ஈழம் வேண்டிப் போராடிய மக்கள் நன்மை பெற்றார்களோ இல்லையோ சிங்களமக்களும், அரசும் நிறைந்த நன்மைகளை அனுபவித்தன. அப்படியென்றால் ஏனிந்தப் போராட்டம்?. நாங்கள் நொந்து சிங்களவர் வாழ்வதா? என்ற கேள்விகள் எழும். அந்தக் கேள்விகளுக்கான விடைகளை இனித்தேட ஆரம்பிப்போம்.

தொடரும்

# கவி நிலம்

சமூகச் செயற்பாட்டாளர் ஸர்மிளா ஸெய்யித் மட்டக்களப்பு ஏறாவூரில் பிறந்தர் இதழியல், கல்வி முகாமைத்துவம் உளவியல் துறைகளில் பயின்றுள்ளார். சிறகு முளைத்த பெண் (கவிதைகள் 2012)"உம்மத்" (நாவல் 2013) ஒவ்வா (கவிதைகள் 2014) ஆகிய நூல்கள் காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. "மந்திராலைப்" எனும் சமூகச் செயற்திட்டத்தின் மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கான பணிகளை முன்னெடுத்து வரும் கவிதாயினியை யாழ்களரிக்காக கொழும்பில் சந்தித்தோம்.

(ஆசிரியர்)


**உங்கள் செயற்திட்டம் குறித்து அறிய ஆவல் ?**

சாப்பிடுவதற்காக வாழாதே வாழ்வதற்காக சாப்பிடு உணவு மருந்தாக இருக்கட்டும் மருந்து உணவாக வேண்டாம் ஆரோக்கியம், சுகவாழ்வு என்பதற்கு இவைகள் தேவையானதாகும். வளங்களை மட்டுப்படுத்தி எதிர்கால சந்ததிக்கு கையளிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்பதெல்லாம் சுத்தமான குடி நீர், ஏசி, காஸ், மின்னடுப்பு போன்ற வளங்களை வைத்தே ஆடம்பர வாழ்வை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டே எமது செயல்திட்டங்கள் ஆரம்பமாகின்றது.

**உங்கள்பணிகளில் பெண்களின் வகிபங்கு எவ்வாறு உள்ளது?**

உள்ளூர் பெண்களின் விவசாயத்தை ஊக்குவிக்கின்றோம் தனிப் பெற்றோர்களை வலுப்படுத்துவதன் மூலமாக அவர்களது உற்பத்திகளைக் கொள்வனவு செய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்துகின்றோம். உணவு, உடை போன்ற பழக்கங்கள் தொடர்பாக கலந்துரையாடுகின்றோம். யோகாசனப் பயிற்சிகள் பிரச்சினைகளிற்கான தீர்வுகள் குறிப்பாக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்.

**சிறகு முளைத்த பெண், ஒவ்வா ஆகிய உங்கள் கவிதைதத் தொகுப்புக்களில் உங்கள் மொழி எவ்வகையானது?**


ஸர்மிளா ஸெய்யித்

கவிதை மொழி என்பது நபருக்கு நபர் வேறுபடுகின்றது. இப்படித்தான் கவிதை இருக்க வேண்டும் இருக்கக் கூடாது என்ற வரம்பு இல்லை ஆனால் எழுதுகின்ற மொழி செம்மைப் படுத்தப்படல் வேண்டும். அதற்கு அதிக வாசிப்புத்தேவை அப்போது தான் எழுத்தாக்கம் ஆழமாகும், அழகாகும் பேசு பொருள் என்பது ஒரு விடயத்தைப் பலர் செல்லியிருப்பர் ஆனால் சொல்லுகின்ற முறை தான் அவரவர் கவிதையை ஆளுகை செய்கின்றது.

**உங்கள் கவிதைகள் சிலவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்?**

மாபெரும் தலைவனை நினைத்து
முதல் காமம்
வாழ விரும்புகின்றேன்
மூன்று கனவுகள்

# ஸர்மிளா ஸெய்யித் கவிதைகள்

## மாபெரும் தலைவனை நினைத்து

விழித்தெழுந்து புறப்படுங்களென்று
தலைவர் உங்களைத் தட்டியெழுப்பி
எத்தனை காலமாகிறது
நினைத்துப் பார்த்ததுண்டா நீங்கள்

பழசெல்லாம் மறந்தே போனதால் உங்களுக்கு
நடந்த கதையெதுவும் வேணாமிங்கு
நியாயத்தின் தராசுகளைத் தூக்கியெறியும்
இரக்கமற்றதும் ஆளை ஆள் தூற்றுவதுமான
கொள்கைகளை நீங்கள் வரைந்த
பாசறையை மட்டும்
ஒருமுறை கூறுங்கள் எங்களுக்கு
தலைமுறைகளைக் கொல்லும்
முதல் கொலையாளி யாரென
அறியாத அஸ்தமனத்தில்
நீங்கள் சிம்மாசனம் ஏறியமர்ந்து
வீசப்படும் கற்களைப் பொறுக்கிச் சேர்ப்பதற்கா?

முஸ்லீம் எம் சமூகத்திலிருந்து
முத்தெனவே தேர்ந்தெடுப்போம்
கிழக்கிற்கொரு முதலமைச்சரை எனத்
தெருத்தெருவாய் முழங்குகிறீர்
இனிப்பாய்த்தானிருக்கிறது

ஆளுக்கொரு திசையிலிழுத்தால்
வள்ளம் அக்கரைபோய் சேருமா, சிந்தியும்
கிழக்கில்தான் எழுகிறான் கதிரவன் எந்நாளும்
ஆனபோதும் மக்களங்கு
இருட்டிலே கிடப்பதைக் கண்டீரா
சிக்கல்களும் பிணக்குகளும் எல்லைகளும்
தீராமல் விடியுமா கிழக்கு
சிந்தித்ததுண்டா எப்போதேனும்

மாபெரும் தலைவனென்று
வாயாரப் புகழ்ந்தும்
அவன் பாசறையில் வந்ததாக
பெருமை பொங்கியும்
அவன் கொள்கை மட்டும்
இல்லாது போனதேனோ உங்களிடம்

தொன்மையின் வரலாற்று மை தொட்டு
உங்கள் தலைவனிடமிருந்து
மடலொன்று வந்தால் ஒன்றுபடுவீரா
தலைவனின் விருப்பமதை ஈடேற்றுவீரா

உங்களைக் கொலை செய்ய
நீங்களே அனுமதித்தீர்கள்
அந்தத் திருப்தியில்தான்
அள்ளித் தந்துங்கள் கனவுகளை
வாங்கிக்கொண்டது அரசாங்கம்
அரியணையில் இருந்தும்
அனைத்தின்பம் பெற்றும் மகிழ்ந்திட்டீர்
இறங்கி வாருங்கள்
தலைவரின் அணியில் வந்த
போராளிகள் நீங்கள்
எங்கள் கைகளையும் ஓங்கச் செய்யும்
கனவையும் கொஞ்சம் நனவாக்கித் தாருங்கள்..!

## முதல் காமம்

உழுத நிலத்தில்
விசிறி விதைக்கப்பட்ட
நெல் மணிகளின்
ஒளிமயமான எதிர்காலத்தை
ஒத்த எதிர்பார்ப்புகளுடன்
விழிகளில் மின்னல்

நதியொன்று தற்காலிகமாக
உறைந்துவிட்டாற்போல
உடலெங்கும் பரவியிருந்த குளிர்ச்சி
மெல்ல ஆவியாக
காமத்தின் மர்மமுடிச்சுக்கள்
ஒவ்வொன்றாய் அவிழ...

உதடுகளை உதடுகளால்
வருடி நனைக்கையில்
உடலை மூடியிருந்த திரையோ
முள்ளென நெருட
விழிகளை மூடிக்கொண்டே
ஆடைகளைக் கரங்கள் ஒதுக்க...
வழமைக்கொவ்வாத செயல்கண்டு
வெட்கம் கண்களைப் போர்த்திக்கொள்ள...

தவிர்க்கப்பட்ட கனி குறித்த
எச்சரிக்கைகளையும்
ஆசீர்வதிக்கப்பட்ட வனத்திலிருக்கும்
ஐஸ்வரியங்களையும்
முற்றாய் மறந்து திளைப்பதே
ஆதாமுக்கும் ஏவாளுக்கும்
அப்போது தேவையாய் இருந்தது!

படைத்தவனின்
விதிகளை
எச்சரிக்கைகளை
மீறுகிறோமெனும் தயக்கம்
மனதில் பரவியிருந்தபோதும்
காமம் விஞ்சியது அனைத்தையும்!

## வாழ விரும்புகிறேன்

ஒருமுறை எனைப் பாடவிடுங்கள்
என் துயரங்களை இசையாக ஒலிக்கவிடுங்கள்

எனை எழுத விடுங்கள்
என் கவலைகளைக்
கவிதையாக வடிக்கவிடுங்கள்

நான் ஊமையில்லை
என் கனவுகளைச் சொல்லவிடுங்கள்
நான் ஜடமில்லை
எனது இதயம் துடிக்கிறது

எதற்கெனக்கு விலங்குகள்
எனை விட்டுவிடுங்கள்
நான் சிட்டுக்குருவிகளோடு
வானத்தை அளக்க வேண்டும்

என் விசும்பல்
யார் காதிலும் விழவில்லையா
என் அழுகை
யாருக்கும் கேட்கவில்லையா

எனை விட்டுவிடுங்கள்
நான் வாழ விரும்புகின்றேன்

விலங்குகளால் இறுக்கினாலும்
வார்த்தைகளால் அடித்தாலும்
தடைகள் குறுக்கிடினும்
நான் இசைப்பேன் எழுதுவேன்
சினேகிப்பேன் வானத்தை அளப்பேன்

எனை விட்டுவிடுங்கள்
நான் வாழ விரும்புகிறேன்

## மூன்று கனவுகள்

முதல் கனவு...

பசும் பச்சைக் கடல் சூழ் தீவு
தீவு முழுதும் கற்பக மரச்சோலை
மஞ்சள் மணல் திட்டுகள்
இளைப்பாறும் மீனவர்

இரண்டாம் கனவு...

மென் நீல வயல்
கதிர்களில் மாதுளைகள்
தூக்கணாங் குருவிக் கூடுகள்
நிழலில் கட்டுச்சாதம் அவிழ்க்கும் பெண்டிர்

மூன்றாம் கனவு...


செந்நிறக் கடல்
சுழியில் அகப்பட்டு மூழ்கும் சோலை
அலைகளில் கரைந்த மணல் திட்டுகள்
மீனவர் கழுத்தில் சுருக்கு

எரிந்த வயல்
கனிகளை விழுங்கும் கதிர்கள்
பிய்ந்து தொங்கும் வெறும் கூடுகள்
நிர்வாணமாய்ப் பெண் சடலங்கள்...

# சொற்பனத்தின் நிஜம்

"எல்லாம் நீர்தாமே சந்தியோகுமையோரே அல்லல் நீக்கி அன்பரெம்மை ஆதரிப்பீரே" புதுமைநிறை சந்தியோகுமையோர் யேசுவின் அப்போஸ்தலர் ஆவார்.இவர் தமக்கென தெரிந்து கொண்ட வசாவிளான் பயிலிக்கலட்டி நூற்றாண்டு விழா கண்ட ஆலயமாகும். குருக்கள் துறவிகள் இறைவனடிசேர்ந்த வண.மரியநாயகம் உட்பட இம் மண்ணில் தோன்றியவர்கள் இப்பகுதியில் ஒரு கொடியில் தோன்றிய மலர்களாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் யாவரும் எமது இனசனங்களாகும். அந்நாட்களில் இங்கு வாழ்ந்த மக்களுக்கு எதுவித பஞ்சமும் இல்லை எனலாம். தோட்டச் செய்கையை மேற்கொண்டு நற்பயன் பெற்று எக்குறையுமின்றி வாழ்ந்த காலம் அது. இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற பெருமையோடு ஒவ்வொரு ஆடிப்பெருநாள் 25ம் திகதி கொண்டாடி மகிழ்ந்தோம். அன்பர், நண்பர், சொந்த பந்தங்களுடன் மகிழ்வுற்று வாழ்ந்து வந்தோம். ஆலயத்தை சூழுவுள்ள பகுதி மக்கள் குடியிருப்பு மேற்குத்திசை கல்லும், முள்ளும் நிறைந்த பற்றைக்காடுகள் மயாண பூமியாகிய ஆலமரம் நிற்கும் பகுதிவரை காட்டு நிலமாகவே இருந்தது. அந்த ஆலமரத்தில் பேய், பிசாசு, களிப்புக்களை அகற்றுவது வழக்கம் எமது உறவினர் ஒருவரில் அசுத்த பிடித்திருப்பதை அறிந்து எனது தந்தை (ஆசை) ஒரு அகப்பை காம்பின் உதவியோடு அந்த ஆலமரத்தில் 3-4 பசாசுகளை ஆணியில் அறைந்து தனது இறை வல்லமையால் நலம் பெறச் செய்தார். அனைவரும் அறிந்ததொன்றாகும். எனது சிறிய தாயார் அங்கு வாழ்ந்தமையால் எந்நாளும் அங்கு சென்று எனது சிறிய சகோதரியுடன் கூடிக்குலாவி மகிழ்ந்து வந்தோம். எமது பாட்டன், பாட்டி, பூட்டன், பூட்டி வரை அந்த மண்ணிலே வாழ்ந்தவர்கள் எனது தாயார் 90 ஆண்டுகளுக்கு முன் பிறந்து வளர்ந்த இடம், காணி, பூமிகள் அனைத்தையும் ஆண்டு அனுபவத்தவர்கள் ஒட்டகப்புலம் மாதா கோவில் அதுவும் வாய்பறைந்த மாதா என்று எம் முன்னோர்கள் கூறியமை என் நினைவில் பதிந்துள்ளது. எனது சிறிய தாயாரின் மகள் றஞ்சி என்னை அழைத்துச் சென்றபோது இதுதான் வாய்பறைந்த மாதா என்று சொன்னதும் நான் திரும்பி ஓடி வந்த ஓட்டம் இன்னமும் மறக்க முடியவில்லை தோட்டத்தில் நீர் இறைக்கும்போது குளித்து மகிழ்வதும் பாடசாலையில் படித்த நாட்களும் என் உடன் மாணவிகளுடன் சேர்ந்து விளையாடிய நாட்களும் நீங்காத நினைவாகவுள்ளது. தோலகட்டிக்கு சென்று அந்த மடத்தில் பறவைகளின் அழகும் கிளி, புறா, மைனா, முயல், என பல உயிரினங்களைக் கண்டு இன்புறுவதும் வண.தோமஸ் அடிகளாருடன் பேசியதும், சிறுவர் மீது பிரியமான இவர் முழங்கை மடிப்பில் புத்தகம் வைத்துக்கொண்டு நீண்ட வெண்தாடியுடன் உலாவி வரும் காட்சி என் கண்களில் நிழலாடுகின்றது. மறக்க முடியாததொன்றாகும். வசாவிளான் காட்டுப்புறமாக இருந்தாலும் அங்குள்ள சந்தோசம் எங்கும் காணமுடியாது. மனமகிழ்வுடன் ஒற்றுமையாக வாழ்ந்த பொன்னான கால அது. இனம் தெரியாத மகிழ்வு நிறைவான வாழ்க்கை அமைந்திருந்தது.

காலம் உருண்டோடியது 1990ம் ஆண்டு இடம் பெயர்வு வருவதற்கு ஒரிரு மாதங்களுக்குள்ளாகவே எனது சொற்பணத்தில் கண்டவை நான் சிறிய தாயாரின் வீதியின் வாசலிலே நின்று கொண்டிருந்தேன். அரசாங்க பாதை கடை எல்லை வரைதான் குடிசனம் உள்ள பகுதி ஆலடி வரையும் காடு கதிரவன் மேற்குத் திசையில் மறைகின்ற நேரம் சனநடமாட்டம் எதுவுமே இல்லை ஆலமரமே தெரியாதபடி எமது குடியிருப்பை நோக்கி இரத்த வெள்ளம் அலை அடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தது. செம்மண் பிரதேசமாயினும் வெள்ளம் இரத்த நிறமாகவே இருந்தது. இதை கண்டதும் பயம் என்னை ஆட்கொண்டது. திடுக்குற்று கண் விழித்தேன் இந்த இடத்திற்கு ஏதோ பிரச்சனை நடக்கப்போகின்றது.என்றே என் மனம் சொல்லிக்கொண்டிருந்தது. அதற்குள்ளாகவே நாட்டுப்பிரச்சனை செல்தாக்குதல்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது எனக்கு மெய் சிலிர்த்தது எனது கனவின் உண்மை இது தான் என ஊர்ஜிதப்படுத்திக் கொண்டேன். அத்தோடு இனி ஊருக்கு போகவே முடியாத நிலை எம் காணிகளும் பறிபோன மாதிரி எண்ணக்கூடியதாக இருந்ததது. அங்கு வாழ் மக்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பலவிதமான கஸ்ரதுன்பங்களை அனுபவித்தார்கள். ஒன்று இரண்டு வருடமா? ஐந்து பத்து வருடமா? இருபத்



தைந்து ஆண்டுகள் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை அங்கு வாழ்ந்தவர்களில் எத்தனையோ உறவுகள் இறந்து விட்டார்கள் சிறுவர்கள் வளர்ந்து திருமணமாகி குழந்தை குட்டியுடன் வாழ்கிறார்கள்.

சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள் இப்படியான நிலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஒரு சொற்பனம் கண்டேன். நான் எமது கிணற்றடியில் நின்று கொண்டிருந்தேன். ஆலடிப் பக்கமிருந்து கரைதெரியாதபடி வெள்ளைவெளெரென ஒளி மயமான பிரகாசத்துடன் கிணற்றடி வரையில் நீர் நிறைந்திருந்தது. அதில் என் பெரியைய்யாவின் மகள் தவமணி அக்காவும் மகன் வின்சனும் முழங்காலுக்க கீழ் தண்ணிரில் நின்று வேலிபோடுகிறார்கள் அதுவும் கதியால் போட்டு வேலி அடைக்கிறார்கள் அதிலும் வேறு எவரையும் காணக்கூடியதாக இல்லை.கண் விழித்தபோது முன்னைய சொற்பனம்என் நினைவுக்கு வந்தது. வசா விளானுக்கு சுபீட்சம் கிடைக்கப்போகிறது. என உணர்ந்து கொண்டேன். ஒன்று இரண்டு மாதத்துக்குள் அங்கு செல்ல அனுமதிகிடைத்தது. ஆலயவிழாவும் நடைபெற்றது. ஆனால் காணிகளை பார்வையிட முடியவில்லை. 5-6 வருடத்தின் பின் உள்ளே போகமுடிந்தது. காடுகளாகவும் காணிகளை கண்டு கொள்ள சிரமமாயும் இருந்தது பால்கிழுவை மரம் பருத்திருந்து எல்லைகளைக் காட்டியது. இப்படியான நிலையில் அத்து மீறி அடுத்தவரின் காணிகளை தமதாக்கி எல்லைகளைப் பலப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு மன உளச்சலை கொடுக்கும் நிலைகளும் ஏற்பட்டுவிட்டது. தற்பொழுது வீட்டுத்திட்டத்தின் மூலம் பல வீடுகள் காட்சியளிக்கின்றது. இரத்த வெள்ளம் நிரம்பிய ஆலடிவரையில் அரசாங்க காணிகளை மக்களுக்கு கொடுத்து வீடுகள் வீதிகள் பல வகையான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது. கிணறு வெட்டவே முடியாத பூமியில் குளாய் கிணறுகளை அமைத்து மின்சார வசதிகளுடன் காணப்படுகின்றது. இக் கிராமம் என்றுமே இல்லாத புதுப் பொலிவுடன் கண் கொள்ளாக் காட்சியளிக்கின்றது.

ஆலயம் புனரமைக்கப்பட்டு கம்பீரமாக காட்சியளிக்கின்றது. வரலாறு படைத்த இம்மண்ணை கைவிட கூடாது என்ற பெரு நோக்குடன் குடியேற ஆரம்பித்துவிட்டனர். வயவையூர் மக்களுக்கோர் ஒரு வரப்பிரசாதம் கிடைத்துள்ளது எனலாம் படைகளை வெல்லும் மாவீரன் சந்தியோகுமையோர் போர்புரிந்து தம் பிரசைகளை தன்னகத்தே ஈர்த்தெடுத்துள்ளார் என்பது புலனாகின்றது. இடம் பெயர்வின் ஊடாக மக்கள்பட்ட கஸ்ரங்கள் எல்லாம் மறந்து திரும்பவும் இம்மண்ணில் வாழவைத்த இறைவனுக்கு நன்றி கூறவேண்டும் இவற்றை உருவாக்குவதற்கு அயராது உழைத்த அரசாங்க அதிபர்கள், பற்பல நிறுவனங்கள், கிராம சேவையாளர் (அம்மணி) உதவியாளர்கள், பொறுப்பாளர்கள் மீள்குடியமர்வுக்கு தம்மை அர்ப்பணித்து செயலாற்றும் அனைவருக்கும் நன்றிகள் பல. இறை அருளினால் வடமராட்சிப் பகுதிக்கு நடக்கப் போகும் இடையூறுகளை கனவின் வழியாக முன்னறிவிக்கப்பட்ட இச்சம்பவத்தை அறிமுகப்படுத்த முடியாதிருந்த போதிலும் யாழ் களரியின் ஊடாக உலகிற்கு அறியப்படுத்த அரியதொரு சந்தர்ப்பத்தை எண்ணிப் பெருமிதமடைகின்றேன்.

✍ துறையூர் இந்திராணி

# நெடுந்தீவும் வறட்சியும்



பழமை வாய்ந்த தமிழ் பிரதேசமான நெடுந்தீவில் குடி தண்ணீர் பிரச்சனை காணப்படுகின்றது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையால் கடல் நீரை குடிநீராக்கும் ஆலை நெடுந்தீவில் அமைக்கப்பட்டு பலருக்கு விநியோகிக்கப்படுடள்ளது.

இங்கே பழமை வாய்ந்த கிணறுகள் பாழடைந்து போயுள்ளது. காட்டுக்குள் வாழும் குதிரைகள் தண்ணீர் இல்லாமல் இறந்து போகும் சம்பவங்கள் தொடர்கின்றது. நன்னீர் பிரதேசங்களிலிருந்து பௌசர்கள் மூலம் நெடுந்தீவு பிரதேச சபை தண்ணீரை விநியோகிக்கின்ற போதும் நெடுந்தீவு மக்களுக்கு தண்ணீர் சவாலுக்கு உள்ளாகியுள்ளது. நெடுந்தீவில் கல்வேலிகள் அமைத்த காட்சிகள் வெயில் கொடுமையிலும் மனதுக்கு ஒரு ரசனையைத் தருகின்றது.

மாட்டுவண்டிகளில், லான் மாஸ்ரர் வாகனத்தில் சில மக்கள் தமது தேவைக்காக தண்ணீரை பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் வசதி குறைந்த குடும்பங்கள் நீண்ட தூரத்திற்குச் சென்று தண்ணீரை தேடவேண்டிய சூழல் காணப்படுகின்றது.

நெடுந்தீவில் நோயாளர் தொழிலாளர்கள் பெருக்கத்தால் சாதாரண கடற் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


வசதி படைத்தவர்கள் 'நோயாளர் படகுகள் மூலம் வளங்களை அழித்து வரகின்றனர். ஆனால் கூலித் தொழிலாளர்கள் தமது கறிக்குக் கூட மீன் பட முடியாமல் தவிக்கின்றனர். வறட்சி என்பது வராது போக,மழை நீரை சேகரிப்போம். மரங்களை நாட்டுவோம். வறண்ட பூமியை வளமாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.



# "காந்தள் உதவும் கரங்கள்" முல்லைத்தீவில்
## 100 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு



காந்தள் புலம்பெயர் இளையோரினால் தாயகத்தில் இயங்கிவருகின்ற 'காந்தள் உதவும் கரங்கள்' என்னும் கிளை அமைப்பின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 100 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு 24.03.2018 சனிக்கிழமை மாலை 4மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காந்தள் உதவும் கரங்கள் இணைப்பாளர் திருமதி காயத்திரிதேவி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகான முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பித்தார். வடமாகாணசபை உறுப்பினர்கள் து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பொலிஸ் அதிகாரி, கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகஸ்தர் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.




இப்பத்திரிக்கை ஜோ.ஜெஸ்ரின என்பவரால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது